## 5. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறுதல்

"திட்டமாக, அல்லாஹ்வும் அவனுடைய வானவர்களும் அந்த நபியின் மீது ஸலவாத்துச் சொல்கின்றார்கள். இறை நம்பிக்கையாளர்களே! நீங்களும் அந்த நபியின் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்வீர்களாக!" (38:56) என்று இறைவன் தன் திருமறையில் பணிக்கின்றான். எனவேதான் ஒருவன் தன் ஆயுளில் ஒரு தடவையாவது எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துக் கூறுவது அவன் மீது கடமை (ஃபர்லு) என்று கூறப்படுகிறது. இந்த ஆயத்தை ஒருவர் ஓதுவதைக் கேட்டதும் உடனே ஸலவாத்துச் சொல்ல வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

இந்தத் திருவசனத்தில் இறைவன் முஸ்லிம்களை நோக்கி இரண்டு பணிகளை ஆற்றுமாறு கூறுகின்றான்; அதாவது எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலாம் கூறுமாறும் ஸலவாத்துச் சொல்லுமாறும் இயம்புகின்றான். எனவே முதலில் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது எவ்வாறு ஸலாம் கூறுவது என்பதைக் கவனிப்போம். நாம் தொழுகையில் அத்தஹிய்யாத் ஓதும் பொழுது, 'அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு' என்று ஓதுகின்றோமே அதுவே பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலாம் கூறும் முறையாகும். இவ்வாறு முதன் முதலாக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு விண்ணேற்றத்தின் போது ஸலாம் உரைத்தான் இறைவன். அதனையே நாம் அத்தஹிய்யாத்தில் ஓதுகின்றோம்.

இத்தகு பெருமையை இறைவன் வேறு எந்த நபிக்கும் நல்கவில்லை. இறைவன் தன் திருமறையில் மற்ற நபிமார்களுக்கு ஸலாம் கூறும் பொழுது 'வஸலாமுன் அலல் முர்ஸலீன்' என்று பொதுவாகக் கூறிவிட்டு 'ஸலாமுன் அலா நூஹின் பில் ஆலமீன்' என்றும் 'ஸலாமுன் அலல் இப்ராஹீம்' என்றும் 'ஸலாமுன் அலா மூஸா வ ஹாரூன்' என்றும் 'ஸலாமுன் அலா இல்யாஸீன்' என்றும் தனிப்



பட்ட சில நபிமார்கள் மீது ஸலாம் கூறுகின்றான். ஆனால் விண்ணேற்றத்தின்போது இறைவன் எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு 'அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு' என்று அருமை பெருமையுடன் ஸலாம் கூறி இருப்பது போன்று வேறு எந்த நபிக்கும் கூறவில்லை. மேலும் அந்த நபிமார்களின் உம்மத்துக்களை நோக்கி அந்த நபிமார்கள் மீது ஸலவாத்துக் கூறுமாறு பணிக்கவுமில்லை. அவர்கள் மீதெல்லாம் இறைவன் ஒரு தடவை ஸலாம் கூறியதோடு சரி, எப்பொழுதும் தாமும் வானவர்களும் அவர்களுக்கு ஸலாம் கூறிக் கொண்டிருப்பதாகவோ அவர்கள் மீது ஸலவாத்து முழங்கிக் கொணடிருப்பதாகவோ இயம்பவில்லை.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நாம் ஸலாம் கூறுவது நம் இல்லத்திலிருந்தும் கூறலாம்; மதீனா சென்று அவர்களின் அடக்க இடமாகிய ரௌலா ஷரீபின் முன் நின்றும் கூறலாம்.

மதீனா என்பது சாமான்யப்பட்ட ஊரா? அங்கு நாம் செல்வதே மகத்தான நற்பேறாகும். எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அதில் குடியேறும் முன் யத்ரிப் என்னும் பெயருடன் சிற்றூராக இருந்த அது எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மண்ணில் தங்களின் திருப்பாதங்களை வைத்த கணத்திலிருந்து, 'மதீனத்துந் நபி' (நபியின் பட்டணம்) என்றாகியது; அதன் பின் அந்நகருக்கு நூற்றுக்கு மேற்பட்ட பேர்கள் ஏற்பட்டு விட்டது. புதுமையினும் புதுமையாகும். இத்துணைச் சிறப்பு வேறு எந்நகருக்கும் ஏற்பட்டதில்லை. மனிதர்களின் நாயகமாகவும் நபிமார்களின் நாயகமுமான எம்பெருமானார் (ஸல்) அவர்களின் திருமேனியைத் தன்னகத்தே அது பெற்றிருப்பதன் காரணமாக அது 'ஸையிதுல் புல்தான்' (நகரங்களின் நாயகம்) என்று அழைக்கப்படுகிறது. கஃபாவைத் தவிர்த்து மக்காவைவிட மதீனாவே சிறந்தது என்றும் கூறப்படுகிறது. மக்கா இப்ராஹீம் (அலை) அவர்களின் ஹரமாக இருப்பது

போன்று மதீனாவும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் ஹரமாக உள்ளது. மதீனாவில் நாளொன்றுக்கு காலையில் எழுபதாயிரம் வானவர்களும் மாலையில் எழுபதாயிரம் வானவர்களும் இறங்கி எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துமாரி பொழிகின்றனர். உலகின் மீது பொழியப்படும் இறைவன் அருண்மாரி (ரஹ்மத்) ஆனது நூற்றுக்கு தொண்ணூற்று சதவிகிதம் மதீனாவின் மீதே பொழியப்படுகிறது. அங்கு ரமலானில் நோற்கப்படும் நோன்பு மற்ற இடங்களில் ஆயிரம் மாதங்கள் நோற்கப் படும் நோன்புக்கு நிகராகும் என்றும் அங்குத் தொழப்படும் ஒரு ஜும்ஆத் தொழுகை மற்ற இடங்களில் தொழப்படும் ஆயிரம் ஜும்ஆத் தொழுகைக்கு சமம் என்றும் எம்பெருமானார் (ஸல்) அவர்களே இயம்பியுள்ளார்கள். அங்கு செய்யப்படும் ஒரு நற்செயல் மற்ற இடங்களில் செய்யப் படும் ஆயிரம் நற்செயல்களின் பலனைப் பெற்றுத் தரும் என்று இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தம் 'இஹ்யாவு உலூமித்தீனில்' குறிப்பிடுகின்றனர். மக்காவைவிட மதீனா மீது இரு மடங்கு 'பரக்கத்' செய்யுமாறு பெருமானார் (ஸல்) அவர்களே இறைஞ்சியுள்ளார்கள். மதீனாவின் தூசி தொழுநோய்க்கு ஔடதம் என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்துள்ளார்கள். எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கு அடங்கப்பட்டிருப்பதன் காரண மாக அவர்களுக்கு மரியாதை செய்யும் முகத்தான் அங்கு மக்கள் ஒருவரையொருவர் சப்தமிட்டு அழைப்பது கூடக் கிடையாது. பக்திமான்கள் அதன் எல்லைக் கப்பால் சென்று தான் மலம் கழித்து வந்தார்கள். அதன் தெருக் களைப் பெருக்கித் தூய்மைப்படுத்துவதைப் பேரரசர்களும் மாபெரும் பேறாகக் கருதினார்கள். அங்கு இறப்பெய்தி அடங்கப் பெற்று எம்பெருமானார் (ஸல்) அவர்களின் பரிவுரைக்கு முற்றிலும் உரியவர்களாக ஆக வேண்டும் என்ற நோக்கத்துடன் எத்தனையோ பேர் அங்கு வந்து தங்கி இறப்பை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டுள்ளார்



கள். அங்குள்ள எழுபதாயிரம் பேர் மறுமையில் முழுமதி நிகர்த்த முகத்துடன் எழுப்பிக் கேள்வி, கணக்கின்றி சுவனம் புகுவர் என்றும் கூறப்படுகிறது. அங்குள்ள உஹத் மலை சுவன வாசலின் மீது அமைக்கப்பட்டிருக்கிறது என்றும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் திருவுள மாயுள்ளனர்.

மஸ்ஜிதெ நபவீயில் என்னுடைய வீட்டுக்கும் என்னுடைய மிம்பருக்கும் (மேடைக்கும்) இடையிலுள்ள இடம் சுவனப் பூங்காக்களில் ஒன்றாகும் என்றும் அங் குள்ள மிஹ்ராபானது சுவனத்து வாசற்படி மீது அமைக்கப் பட்டிருக்கிறது என்றும் அந்த மிம்பர் ஹௌலுல் கௌதர் மீது அமைக்கப்பட்டிருக்கிறது என்றும் மிம்பருக்கும் மஸ்ஜிதெ முஸல்லாவுக்கும் இடையிலுள்ள இடம் சுவனப் பூங்காக்களில் ஒன்று என்றும் மஸ்ஜிதெ நபவீயில் எவர் நாற்பது நேரத் தொழுகையைத் தொழுகிறாரோ அவருக்கு நரகத்தை விட்டும் விடுதலைப் பத்திரம் எழுதப்படுவதுடன் நயவஞ்சகத்தை விட்டும் அவர் தூய்மை பெறுவார் என்றும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்துள்ளனர்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, எம்பெருமானார் (ஸல்) அவர்களின் உடலைப் பொதியப் பெற்றுள்ள ரௌலா ஷரீஃப் என்பது சாமான்யப்பட்ட இடமா? அது எம்பெரு மானார் (ஸல்) அவர்களின் உடலைப் பொதியப் பெற்றிருப்பதன் காரணமாக கஃபத்துல்லாஹ்வையும் விட, வானங்களையும் விட, சுவனங்களையும் விட, அர்ஷையும் விடச் சிறப்புடையது. காரணம் விண்ணேற்றத்தின் போது அவர்களின் காலணி அர்ஷில் பட்டதனால் அர்ஷே தூய்மையுற்றது என்று இறைவனே கூறியுள்ளானல்லவா? எனவே தான் அவர்கள் மறுமையில் அவர்களின் அடக்க இடத்தோடு சுவனத்துக்கு உயர்த்தப்படுவார்கள் என்று கூறப்படுகிறது. அத்தகைய இடத்தில் நிற்கும் பேறு கிடைப்பது சாமான்யப் பேறா என்ன?

"எவர் ஹஜ்ஜுக் கடமையை முடித்துக் கொண்டு என் மறைவுக்குப் பின் மதீனா வந்து என்னுடைய அடக்க இடத்தைத் தரிசிக்கின்றாரோ அவர் என்னை உயிரோடு தரிசித்தவர் போலாவார்" என்றும் "அவர் மறுமையில் என் பக்கலில் அமர்ந்திருப்பார்" என்றும் "அவருக்கு நான் இறைவனிடம் பரிந்துரைப்பது என் மீது கடமையாகி விட்டது" என்றும் "அவருக்கு இரண்டு ஹஜ் செய்த பலன் கிடைக்கும்" என்றும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்துள்ளார்கள்.

மேலும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள், "எவர் ஹஜ்ஜுக் கடமைய மட்டும் முடித்து விட்டு மதீனா வந்து என் அடக்க இடத்தைத் தரிசிக்கவில்லையோ அவர் என்னை வெறுத்தவராவார்" என்றும் இயம்பியுள்ளார்கள்.

எனவே சுன்னத் வல் ஜமாஅத்தைச் சேர்ந்த உண்மை முஸ்லிம்கள் ஹஜ்ஜுக் கடமையை முடித்துக் கொண்டு மதீனா சென்று எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அடக்க இடத்தை தரிசித்து அவர்களுக்கும் அவர்களின் அருகே அடங்கப் பெற்றிருக்கும் அபூபக்கர் (ரலி),. உமர் (ரலி) ஆகியோருக்கும் ஸலாம் உரைப்பதைத் தங்களின் நீங்காக் கடமையாகக் கொண்டுள்ளனர். மக்கா சென்று ஹஜ்ஜுக் கடமையாற்றிய ஒருவர் மதீனா சென்று எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அடக்க இடத்தைத் தரிசிக்காது கெய்ரோ திரும்பி விட்டபின் தம் தவற்றினை உணர்ந்து அழுது சலித்து வருந்திய பொழுது எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அவரின் கனவில் திருத்தோற்றம் வழங்கி அதற்குப் பிராயச்சித்தமாக ஆங்குள்ள தம் வழி வந்த வள்ளல் இப்னு தபாத்தபாவின் அடக்க இடத்தைத் தரிசிக்கச் சொல்லி மறைந்தனர் என்று இப்னு ஹல்லிகான் கூறுகிறார்.

ஆனால் ஆன்றோர்களில் சிலர் ஹஜ்ஜுச் செய்ய வந்ததோடு மதீனா சென்று எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அடக்க இடத்தைத் தரிசிப்பது அப்பெருமான் நபிக்குச் செய்யும் சங்கையாகாது; எனவே அதற்கென



இஹ்ராம் அணிந்து தனிப்பட்ட முறையில் வருவதே உண்மையாக அவர்களுக்குச் சங்கை செய்வதாகும் என்று எண்ணி அவ்விதம் செய்தவர்களில் முக்கியமானவர் அபூ யஸீத் பிஸ்தாமி (ரஹ்) அவர்களாவர்.

மேலும் தம்மைத் தரிசிக்க வருபவர்களைப் பற்றி எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறும்பொழுது "எவர் என்னுடைய அடக்க இடத்திற்கு வந்து என் மீது ஸலாம் சொல்வாரோ அவருடைய ஸலாத்திற்கு நான் பதில் கூறுவேன்" என்று இயம்பியுள்ளனர்.

அண்ணல் அவர்களின் மறைவுக்கு வெகு காலத்திற்குப் பின் சுலைமான் இப்னு ஸஹீம் (ரஹ்) அவர்கள் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டு, "நாயகமே! தங்களின் ரௌலா ஷரீஃபின் முன் நின்று தங்களுக்கு ஸலவாத்தும் ஸலாமும் சொல்வதைத் தாங்கள் செவியுறுகின்றீர்களா?" என்று வினவிய பொழுது "ஆம்! நான் அவற்றைச் செவியுற்று அவர்களின் ஸலாத்திற்குப் பதில் உரைக்கின்றேன்" என்று அவர்கள் மறுமொழி பகர்ந்தார்கள்.

காஜா முயினுத்தீன் க்ஷிஸ்தீ (ரஹ்) அவர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அடங்கப் பெற்றிருக்கும் ரௌலா ஷரீஃபின் முன் நின்று பின்வருமாறு நெஞ்சுருகப் பாடி ஸலாம் உரைத்தார்கள்.

அஸ்ஸலாம் ஐ பாதுஷாஹே அன்பியா
அஸ்ஸலாம் ஐ ஹலரத்தே கைருல்வரா
அஸ்ஸலாம் ஐ ஸீனத்தெ ஃபர்ஷே ஸமீன்
அஸ்ஸலாம் ஐ ஜானிஷெ அர்ஷே பரீன்
அஸ்ஸலாம் ஐ தாஜுதாரெ ரஹ்னுமா
அஸ்ஸலாம் ஐ இப்திகாரே ஹல் அத்தா
அஸ்ஸலாம் ஐ தஸ்தகீரே பேகிஸான்
அஸ்ஸலாம் ஐ ரஹ்பரே குல் கும்ரஹான்

அஸ்ஸலாம் ஐ முஜ்தபா வமுஸ்தபா
அஸ்ஸலாம் ஐ பர்குஸீதா அன்பியா
அஸ்ஸலாம் ஐ ஜத்தீ ஃபக்பிலுஸ்ஸலாம்
ஹாளிருன் ஃபீபாபிகும் ஹாதல் குலாம்

இவ்வாறு பாடி, எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அவர்கள் ஸலாம் கூறி வாய் மூடு முன் 'வ அலைக்கு முஸ்ஸலாம் யா ஹிந்துல் வலீ' என்று ரௌலா ஷரீஃபிலிருந்து பதில் வந்தது.

இப்ராஹீம் இப்னு பிஷார் (ரஹ்) அவர்கள் தாம் ஒரு தடவை ஹஜ்ஜுக் கடமையை முடித்து விட்டு மதீனா சென்று எம்பெருமானார் (ஸல்) அவர்களின் ரௌலா ஷரீஃபின் முன் நின்று அவர்களுக்கு ஸலாம் உரைத்த பொழுது அங்கிருந்து வஅலைக்கஸ்ஸலாம் என்று பதில் வந்ததாகக் கூறுகிறார்கள்.

தாம் பதினேழு தடவை எம்பெருமானார் (ஸல்) அவர்களின் அடக்க இடத்தைத் தரிசித்து எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறிய பொழுது பதினேழு தடவையும் 'வ அலைக்கஸ்ஸலாம் இப்னு ஸனான்' என்று பதில் வந்ததாக இப்னு ஸனான் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

சுல்தானுல் ஆரிஃபீன் ஸையிதுல் அஹ்மதுல் கபீர் ரிபாயீ (ரஹ்) அவர்கள் மதீனாவுக்குச் செல்வோரிடமெல்லாம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறிவிடும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர். பின்னர் அவர்கள் ஹஜ்ஜுச் செய்ய மக்கமா நகர் சென்ற பொழுது மதீனமா நகருக்கு சென்று பெருமானார் (ஸல்) அவர்களின் ரௌலா ஷரீஃபின் முன் நின்று அவர்களுக்கு ஸலாம் உரைத்த காலை 'வஅலைக்கு முஸ்ஸலாம்' என்று பதில் அவ்வடக்க இடத்திலிருந்து வெளி வந்ததும் ஆங்கிருந்தோர் அனைவரும் வியப்படைந்தனர். அப்பொழுது அவர்கள் இனிய குரலெடுத்துப் பின்வரும் கவியை அரபியில் பாடினார்கள்!



தொலைவில் நானே வாழ்ந்தக்கால்
துய்ய நுந்தம் கப்ரதனை
பலமுறை முத்த மிடவெண்ணி
பண்பாய் அனுப்பினன் என் ஆன்மா
இங்கே இன்று அவ்வான்மா
என்றன் உடலை இழுத்துவந்து
பாங்காய் நுந்தம் திருமுன்னர்
பணிவே மிகுந்து நின்றதுவே
எனவே என்கண் மணியனையீர்!
எழிலார் தங்கள் வலக்கரத்தைக்
கனிவாய் நீட்டின் என் அதரம்
கணத்தில் முத்திக் கனம் பெறுமே.

இவ்வாறு நெஞ்சுருகி, நைந்துருகி ஆண்டகை அவர்கள் பாட அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களின் அழகு சால் வலக்கரம் திடீரென வெளிப்படவே அதனைப் பக்திப் பெருக்கில் மூழ்கிய வண்ணம் முத்தமிட்டனர் ஆண்டகை. இது கண்டு ஆங்கு நின்று கொண்டிருந்தோர்க்குத் தங்களின் கண்களையே தங்களால் நம்ப இயலவில்லை.

பிற்காலத்தில் ஸையித் முஹம்மத் புகாரித் தங்கள் (ரஹ்) அவர்கள், ஹஜ்ஜுக் கடமையை ஆற்றி விட்டு மதீனா சென்ற பொழுது அவர்களுக்கு அறிமுகமாக இருந்த சிலர் அவர்களை ஸையித் என்று அழைத்துப் பெரிதும் மரியாதை செய்த பொழுது ஆங்கிருந்த ஸையித்களில் ஒருவரான ஷரீஃபிற்கு மிகவும் பொறாமை ஏற்பட்டது. "நான் தான் ஸையித் அவர் ஸையிதல்ல" என்று அவர் கூறினார். "நான்தான் ஸையித்; நீர் ஸையிதல்ல" என்று புகாரித் தங்கள் கூற இருவருக்குமிடையே தகராறு முற்றி, "நாம் இருவரும் ரௌலா ஷரீஃபின் முன் நின்று எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் உரைப்போம். எவருடைய ஸலாத்திற்கு எம்பெருமானார் (ஸல்) அவர்கள் பதில் கூறுகின்றார்களோ அவரையே நாம் ஸையித் என்று அழைப்போம்" என்று இருவரும் ஒரு முடிவுக்கு வந்து

அவ்விதமே செய்தனர். முதலில் ஷரீஃப் ரௌலா ஷரீஃபின் முன் நின்று எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எத்தனையோ முறை ஸலாம் உரைத்தும் அங்கிருந்து யாதொரு பதிலும் வரவில்லை. அது கண்டு அவருக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவில்லை.

பின்னர் புகாரித் தங்கள் ஸலாம் சொல்லவேண்டிய முறை வந்தபொழுது அவர்களை ஸலாம் கூறுமாறு மக்கள் கூறினர். சற்றுத் தாமதித்துக் கூறுவதாக அவர்கள் இயம்பினார்கள். பின்னர் சற்று நேரம் கழித்து மிகவும் மரியாதையுடன் சென்று ரௌலா ஷரீஃபின் முன் கைகட்டி நின்று ஸலாம் உரைத்தார்கள் அவர்கள். அடுத்த கணம் 'வஅலைக்கு முஸ்ஸலாம்' என்ற பதில் ரௌலா ஷரீஃபிலிருந்து வெளி வந்தது. இது கண்டு ஆங்கிருந்தோர் அனைவரும் பெருவியப்பில் ஆழ்ந்தனர். ஷரீஃபுடைய நிலையோ பரிதாபத்திற்கிடமாகியது. இது கண்ட புகாரித்தங்கள் அவர்கள் இரங்கி, "இப்பொழுது நீரும் ஸலாம் கூறும். உமக்கு பதில் கிடைக்கும்" என்று சொல்ல அவ்வாறே அவரும் கூற ரௌலா ஷரீஃபிலிருந்து, 'வஅலைக்கு முஸ்ஸலாம்' என்று பதில் வந்தது. இது கண்டு அங்கிருந்த அனைவருக்கும் முன்னைவிடப் பன்படங்கு வியப்பு அதிகமாகியது. அப்பொழுது புகாரித் தங்கள், அவர்களை நோக்கி, "நாங்கள் இருவரும் ஸையித்கள்தாம். அவர் என்னை ஸையிதல்ல என்று கூறியதால் நானும் அவரை ஸையிதல்ல என்று பதிலுக்கு உரைத்தேன். முதலில் அவர் எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் உரைத்த பொழுது அவர்கள் தங்களின் அடக்க இடத்தில் தொழுது கொண்டிருந்ததால் அவருடைய ஸலாத்திற்கு அவர்கள் பதில் கூறவில்லை. இதனை அவர் அறியார். நான் இதனை அறிந்ததன் காரணமாகச் சற்று தாமதித்து அவர்கள் தொழுது முடிந்த பின் அவர்களுக்கு ஸலாம் உரைத்தேன். அவர்கள் பதிலுரைத்தாாகள். பின்னர் அவரும் ஸலாம் உரைத்தார். அவருக்கும் ஸலாம் உரைத்து நாங்கள் இருவரும் ஸையித்கள்தாம் என்பதை எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மெய்ப்பித்தார்கள்" என்று கூறினர்.



காயல் தந்த மேதை தைக்கா ஸாஹிப் வலி அவர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் ரௌலா ஷரீஃபின் முன் நின்று தாம் இயற்றிய 'அஹ்மதுல்லாஹல் வலீ' என்று துவங்கும் செய்யுளை உருக்கத்துடன் பாடிய பொழுது எம்பெருமானார் (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி அவர்கள் வேண்டிக் கொண்ட வண்ணம் தம் முகத்தை அவர்களின் முகத்தோடு சேர்த்து முத்தமிட்டார்கள் என்றும் எனவேதான் இச்செய்யுளைப் பாடும்பொழுது மக்கள் தாழ்மையுடன் எழுந்து நிற்கின்றார்கள் என்றும் கூறப்படுகிறது.

இன்றும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் ரௌலா ஷரீஃபின் முன் நின்று சொல்லப்படும் ஸலாத்திற்கு அவர்கள் பதில் கூறவே செய்கின்றார்கள். ஆன்றவிந்த சான்றோர்களின் செவியில் அது விழுகிறது. ஏனையோர் செவியில் அது விழுவதில்லை.

அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களின் அடக்க இடத்தின் முன் நின்று ஸலாம் கூறுவதற்கு மட்டும் தான் அவர்கள் ஸலாம் கூறுகின்றார்களென்பதில்லை. நாம் எங்கிருந்து அவர்களுக்கு ஸலாம் உரைத்த போதினும் அவர்கள் அதனை எய்தப் பெற்று பதில் ஸலாம் உரைக்கின்றார்கள். இதைப் பற்றிப் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறும்பொழுது, "அல்லாஹ்வுக்கு அகிலம் சுற்றி வரும் வானவர்கள் சிலர் உள்ளனர். என் உம்மத்கள் என்மீது சொல்லும் ஸலவாத்தை அவர்கள் என்னிடம் எய்த வைப்பர்" என்று கூறியுள்ளனர். மேலும் அவர்கள், "எவரேனும் என்மீது ஸலாம் கூறின் அல்லாஹ் என் உடலில் என் உயிரைப் புக வைக்கிறான். நான் அவருடைய ஸலவாத்திற்குப் பதில் கூறுகிறேன்" என்றும் இயம்பியுள்ளார்கள்.

மேலும் "ஒரு தடவை ஜிப்ரீல் என்னிடம் வந்து உம் மீது ஸலவாத்துச் சொல்பவர்மீது தான் ஸலவாத்துச் சொல்வதாகவும் உம் மீது ஸலாம் சொல்பவர்மீது தான்

ஸலாம் சொல்வதாகவும் இறைவன் கூறி இருப்பது உமக்கு மகிழ்ச்சியை நல்கவில்லையா?'' என்று கூறியதாகவும் பெருமானார் (ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள். இதிலிருந்து எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறுபவர்களுக்கு எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மட்டு மல்லாது இறைவனும் ஸலாம் கூறுகின்றான் என்பது நன்கு பெறப்படுகிறது.

அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள்மீது ஸலவாத்துச் சொல்வதும் அவர்களுக்கு ஸலாம் உரைப் பதும் ஒன்றோடொன்று இணைந்தவையாகும். எனவே தான் ஸலவாத்தும்ஸலாமும் கூறுமாறு இறைவன் நமக்குப் பணிக்கின்றான். 'அவை இரண்டும் சுவனம் செல்வதற்கான பாதைகளாயிருக்கும்' என அபூ ஹுரைரா (ரலி) கூறி யுள்ளார்கள். எனவே நாம் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் உரைக்கும் பொழுது 'அஸ்ஸலாமு அலைக்கும் யா ரஸூலல்லாஹ்' என்று மட்டும் கூறாது "அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யா ரஸூலல்லாஹ்" என்று கூறுவதே ஏற்புடைத்தாகும். அவர்கள் மீது பின் வருமாறு ஸலாம் உரைப்பது பெரிதும் விரும்பத்தக்க தாகும்.

அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யா ரஸூலல்லாஹ்
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யா ஹபீபல்லாஹ்
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யா கைர கல்கில்லாஹ்
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யா ஸஃப்வதல்லாஹ்
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யா ஸையிதுல் முர்ஸலீன்
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யா இமாமுல் முத்தகீன்
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யா ஷஃபீ அல் முஃத்னபீன்
அஸ்ஸலாத்து வஸ்ஸலாமு அலைக்க யா ஹாத்த மன்னபிய்யீன்



வஅலா ஆலிக
வஅஹ்லி பைத்திக வ அஸ்ஹாபிக அஜ்மயீன்
ஜஸாகல்லாஹு அன்னா அஃப்ழல வ அக்மல
மாஜஸா ரஸூலன் அன் உம்மத்திஹி வநபிய்யன்
அன் கௌமிஹி
வஅஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு
லா ஷரீக்கலஹு
வ அஷ்ஹது அன்னக அப்துஹு வரஸூலுஹு
வஅஷ்ஹது அன்னக கத் பல்லக்த ரிஸாலத்த வஅத்தைத்தல்
அமானத்த வநஸஹ்த்தல் உம்மத்த
அல்லாஹும்ம ஆத்திஹில் வஸீலத்த வல் பழீலத்த
வத்தரஜத்தர் ரஃபீ அத்த வப் அதுஹு மகாமன்
மஹ்மூதனில்லதீ வ அத்தஹு வர்ஸுகுனா ஷஃபா
அத்தஹு யவ்மல் கியாமத்தி இன்னக லாதுஹ்லி
ஃபுல் மீஆத்.

இவ்வாறு ஸலாம் உரைத்த பின் ஒருவர் தம் விருப்பங் களை அவர்களிடம் எடுத்துரைத்து அவற்றை நிறை வேற்றித் தர இறைவனிடம் இறைஞ்சுமாறு அவர்களை வேண்டிக் கொள்ளலாம். உமர் (ரலி) அவர்களின் காலத் தில் ஒரு தடவை கடும்பஞ்சம் ஏற்பட்டபொழுது ஒருவர் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் ரௌலா ஷரீஃபின் முன் நின்று "நாயகமே! மக்கள் மழையின்றிப் பஞ்சத்தால் நலிவுறுகின்றனர். தாங்கள் நாடு செழிக்கும் நன்மழை பெய்யுமாறு இறைவனிடம் இறைஞ்சுங்கள்'' என்று வேண்டிய பொழுது அவரின் கனவில் அன்றிரவு எம்பெரு மானார் (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, "நீர் உமரிடம் சென்று என் ஸலாம் கூறி விரைவில் நன்மழை பெய்து நாடு செழிக்கும் என்று கூறும்" என்று நன்மாராயம் மொழிந்து விட்டு மறைந்தனர். அவ்விதமே அவர் செய்ய. அது கேட்டு உமர் (ரலி) அவர்கள் அழுதுவிட்டார்கள் என கிதாப் பைஹகீயில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸலவாத்துச் சொல்லும் பொழுதும் எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறுவது மிகவும் ஏற்புடையதாகும். ஒருவர் தாம் எழுதும் பொழுது எழுத்துச் சுருக்கத் திருப்பெயர் வருந்தொறும் 'ஸல்லல்லாஹு' அலைஹி என்று மட்டும் எழுதும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். அவரின் கனவில் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் திருத்தோற்றம் வழங்கி, "நீர் என் ஸலவாத்தோடு ஸலாமும் சேர்க்காது எழுதியதன் காரணமாக வஸல்லம் என்ற சொல்லிலுள்ள நான்கு எழுத்துக்களுக்கான நாற்பது நன்மைகளை இழந்துவிட்டீர்" என்று கூறியதாக இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் இயம்பியுள்ளனர்.

இப்ராஹீம் நஸபீ (ரஹ்) என்ற ஹதீதுக் கலை விற்பன்னர் ஒரிரவு பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் கண்ட பொழுது அவர்கள் சற்று வருத்தத்துடன் இருப்பதைக் கண்டு அதற்கான காரணத்தை வினவிய பொழுது. "நீர் என் மீது ஸலவாத்து எழுதுகின்றீரேயன்றி ஸலாத்தையும் எழுதுகின்றீரில்லையே" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறி மறைந்ததாகவும் வரலாறு உள்ளது.



## 6. பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துக் கூறுதல்

அடுத்து ஸலவாத்து என்றால் என்னவென்பதைப் பற்றி ஆராய்வோம். ஸலவாத்து என்ற பெயர்ச் சொல் 'ஸல்லூ' என்ற ஏவல் வினையிலிருந்து வந்ததாகும். பொதுவாக இதற்குப் புகழ்தல், மாண்புறச் செய்தல் என்றும் பொருள் விரிக்கலாம். எம்பெருமானார் (ஸல்) அவர்களை இறைவன் அதிகமதிகமாகப் புகழ்ந்ததன்காரணமாக புகழுக்குரியவர் என்று பொருள்படும் முஹம்மத் என்னும் திருப் பெயரை அவர்களுக்குச் சூட்டியதோடு மறுமையில் எல்லோர்க்கும் பரிந்துரைக்கக் கூடிய தனிப் பெரும் தகுதியையும் அவர்களுக்கு வழங்கி அவர்களை மாண்புறச் செய்தான். எனவே இறைவன் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வதென்றால் அவர்களை அனைவர் முன்னிலையிலும் இறைவன் போற்றிப் புகழ்ந்து அவர்கள் மீது தன் அருண் மழையை, அருட் சுடரைப் பொழிந்து அவர்களை மாண்புறச் செய்து கொண்டுள்ளான் என்பதேயாகும்.

மேலும் வானவர்களும் அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்கின்றார்கள் என்று இறைவன் கூறும்பொழுது அவர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் மாண்பை, மகத்துவத்தை மென்மேலும் உயர்த்திக் கொண்டிருக்குமாறு இறைவனிடம் இறைஞ்சுவதோடு தங்களின் பொறுப்பில் இறைவன் தந்துள்ள அருட் சுடர்களை அவர்கள் மீது பொழிந்து கொண்டுள்ளார்கள் என்பதேயாகும்.

இவ்வாறு தானும் தன் வானவர்களும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துக் கூறுவதாகச் சொன்ன இறைவன் மனித இனம் அனைத்தையும் விளித்து நீங்களும் அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் கூறுங்கள் என்று பணிக்கின்றான். எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நாம் ஸலாம் கூறுவதென்றால், 'அஸ்ஸலாமு அலைக்க

யாரஸூலல்லாஹ்' என்று கூறினால் போதும். ஆனால் அவர்கள் மீது ஸலவாத்துக் கூறுவதென்றால், "அல்லாஹும்ம இன்னீ ஸல்லைத்து அலா ஸையிதினா முஹம்மதின் (இறைவனே! எங்களின் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது நான் ஸலவாத்து என்னும் ரஹ்மத்தைச் சொரிந்தேன்) என்று கூற வேண்டும். ஆனால் நாம் அவ்விதம் கூறாது, 'அல்லாஹும்ம ஸல்லி அலா ஸையிதினா முஹம்மதின்' (இறைவனே! எங்களின் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது நீ ஸலவாத்துச் செய்வாயாக!) என்று இறைவனையே வேண்டுகின்றோம். இதன் பொருள் "இறைவனே! உன் இறுதித் தூதுவராம் முஹம்மத் (ஸல்) அவர்களின் அருமை பெருமையினைச் சிற்றறிவு படைத்த எங்களால் அறிய இயலாதுள்ளது! எனவே அவர்களுக்குரிய தகுதிக்கு தக்க வண்ணம் நாங்கள் அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்ல இயலாத நிலையில் உள்ளோம். நீயோ அவர்களின் தகுதியை நன்கு அறிந்தவன்; எனவே நீயே அவர்களுக்கு ஸலவாத்துக் கூறுவாயாக! அவர்களின் தகுதிக்கேற்ற வண்ணம் அவர்கள் மீது உன் அருண்மாரியைப் பொழிந்தருள்வாயாக!! மேலும் அவர்கள் மீது சொரியப்படும் அந்த அருட் சுடரில் அணுவத்தனைப் பகுதியையாவது நாங்களும் பெறக்கூடிய தகுதியை எங்களுக்குத் தந்தருள்வாயாக!!" என்று இறைஞ்சுவதேயாகும்.

எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நாம் ஸலாம் கூறுங்கால் பெருமானார் (ஸல்) அவர்களையே நாம் நினைவில் கொள்ளுகின்றோம். ஆனால் ஸலவாத்துக் கூறும் பொழுதோ நாம் இறைவனையும் அவனுடைய திரு நபியையும் ஒரே பொழுதில் நினைவு கொள்கின்றோம். மேலும் எம்பெருமானார் (ஸல்) அவர்களுக்காக நாம் இறைவனிடம் இறைஞ்சவும் செய்கின்றோம். அவ்விதம் செய்யும் பொழுது நம்முடைய தாழ்மையையும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் மேன்மையையும் இறைவனின் அளப்பரும் பேராற்றலையும் ஒரே வாக்கியத்தில் அமைத்துக் கூறுகின்றோம். இவையே ஸலவாத்திலுள்ள தனிப்பெரும் சிறப்பாகும். இம்மூன்று அம்சங்களும் வேறு எந்த 'துஆ'விலும் ஒருங்கே அமையப் பெற்றில்லை.



உண்மையில் இறைவன் தானே பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துக் கூறுகின்றான். அவ்விதமாயின் நம்மை ஏன் பெருமானார் (ஸல்) அவர்களின் மீது ஸலவாத்துச் சொல்லுமாறு பணிக்கின்றான் என்று நீங்கள் வினவலாம்.

இறைவன் தன் திருமறையில் பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி, "குலில் ஹம்துலில்லாஹி" (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே) என்று கூறுமாறு அருட் கட்டளை பிறப்பிக்கின்றான். இதிலிருந்து புகழுக்குரியவன் தான் ஒருவனே என்பதை வெளிப்படுத்த விரும்புகின்றான். அது போன்று இறைவன் தன் தோழராகிய பெருமானார் (ஸல்) அவர்கள் மீது தான் வைத்திருக்கும் அன்பை, மதிப்பை வெளிப்படுத்துவதற்காக வேண்டி முஸ்லிம்களை நோக்கி அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லுமாறு கூறுகின்றான்.

மேலும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் மீது அன்பு, பக்தி ஆகியவை அவர்களின் உம்மத்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விநாடியும் இருக்க வேண்டும் என்பதற்காக அவர்களை அவர்களின் உம்மத்கள் எப்பொழுதும் தம் நெஞ்சிலே பசுமை மாறாது நினைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் மீது ஸலவாத்துக் கூறுமாறு பணிக்கின்றான் இறைவன்.

எம்பெருமானார் (ஸல்) அவர்களின் உம்மத்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லுந்தொறும் அவர்களின் பாவங்களை இறைவன் பொறுத்து அவர்களின் மீது தன் பேரருளைச் சொரிந்து கொண்டுள்ளான் என்பதே இறைவன் ஸலவாத்துச் சொல்லும் அடியார்கள் மீது ஸலவாத்துச் சொல்லுகிறான் என்பதன் பொருளாகும்.

மேலும் ஒருவன் சொல்லும் ஸலவாத்தே அவனின் பவம் பொறுத்தருளுமாறு இறைவனிடம் இறைஞ்சும் என்றும் கூறப்படுகிறது.

அவ்விதமாயின் இத்தகு மாண்பாரும் ஸலவாத்தை எவ்வாறு கூறுவது என்று நீங்கள் வினவலாம். இதே வினாவையே நபித் தோழர்களும் முன்னர் கூறப்பட்ட திரு வசனம் வந்தபொழுது எம்பெருமானார் (ஸல்) அவர்களிடம் வினவினர். "நாயகமே! தங்களுக்கு ஸலாம் கூறும் முறையை அத்தஹிய்யாத்தில் ஸலாம் ஓதுவதன் மூலம் அறிந்து கொண்டோம். ஆனால் தங்கள் மீது ஸலவாத்துக் கூறுவது என்றால் எவ்வாறு?" என்று அவர்கள் வினவினார்கள். அப்பொழுது எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அத்தஹிய்யாத்தில் வரும் ஸலவாத்து இப்ராஹீமிய்யாவைப் படித்துக் கொடுத்தார்கள். (விவரம் ஸலவாத்தின் வகைகள் என்ற அத்தியாயத்தில் காண்க)

அது தவிர,

'ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லம்'

'அல்லாஹும்ம ஸல்லி அலா ஸையிதினா
முஹம்மதின் வஆலிஹி
வஸஹ்பிஹி வஸல்லம்'

'அல்லாஹும்ம ஸல்லி அலா ஸையிதினா முஹம்மதின்
வஅலா ஆலி ஸையிதினா
முஹம்மதின்வபாரிக் வஸல்லிம் அலைஹி

'யாரப்பி ஸல்லி வஸல் லிம்தாயி மன் அபதா அலா
ஹபீபிக்க
கைரில் ஹல்கி குல்லிஹிமி

ஆகியவையும் சிறுசிறு ஸலவாத்துக்களாகும்.

இனி ஸலவாத்தைப் பற்றிப் பெருமானார் (ஸல்) அவர்கள் என்ன கூறியுள்ளார்கள் என்பதைக் கவனிப்போம்.



## ஒரு ஸலவாத்துக்குரிய நன்மைகள்

"ஒருவர் என்மீது ஒரு தடவை ஸலவாத்துச் சொல்லின் அவர் மீது அல்லாஹ் பத்துத் தடவை ஸலவாத்துச் சொல்வான். வெள்ளி இரவு, பராஅத் இரவு, லைலத்துல் கத்ர் இரவு ஆகிய இரவுகளில் கூறப்படும் ஒவ்வொரு ஸலவாத்துக்கும் எழுபது தடவை ஸலவாத்துக் கூறுகிறான்."

"ஒருவர் ஒரு தடவை என் மீது ஸலவாத்துச் சொல்லின் அல்லாஹ் அவருடைய பத்துப் பாவங்களை மன்னிப்பதோடு அவருடைய பத்துப் பதவிகளையும் உயர்த்துகின்றான். அது அவர் பத்து அடிமைகளுக்கு விடுதலை நல்கியதற்குச் சமமாயிருக்கும்."

"ஒருவர் என்மீது ஸலவாத்துக் கூறின் அவர் மீது மூன்று நாட்களுக்கான பாவங்களை எழுத வேண்டாமென்று கிராமன் காத்திபீன் என்ற வானவர்களுக்கு இறைவன் உத்தரவு பிறப்பிப்பான்."

ஒருவர் கூறும் ஒரே ஸலவாத்தை இறைவன் ஏற்றுக் கொண்டு விட்டால் அவருடைய எண்பது ஆண்டுப் பாவங்களைப் பொறுத்தருள்வான்.

"என்னை உண்மைப்படுத்தும் நோக்குடன் ஒருவர் என்மீது ஒரு ஸலவாத்தைக் கூறின் அதனால் இறைவன் ஒரு வானவரைப் படைப்பான். அவருக்கு இரண்டு இறக்கைகள் உண்டு. ஒன்று எழுவானையம் மற்றொன்று படுவானையும் தொட்டுக் கொண்டிருக்கும். அவரின் இரண்டு கால்களும் ஏழாம் பூமியின் கீழும் அவரின் தலை அர்ஷுக்குக் கீழேயும் இருக்கும். அல்லாஹ் அந்த வானவரை நோக்கி, 'என் ஹபீபின் மீது என் அடியான் கூறிய ஸலவாத்துப் போன்று நீரும் அவர் மீது ஸலவாத்துக் கூறும்' என்பான். பின்னர் அந்த வானவர் மறுமை நாள் வரை அவர்மீது ஸலவாத்துக் கூறுவார்."

ஒருவன் என்மீது மண்ணுலகில் ஒரு ஸலவாத்தைச் சப்தமிட்டுக் கூறின் அவன் மீது ஏழு வானங்களிலுள்ள வானவர்கள் ஸலவாத்தைச் சப்தமிட்டுக் கூறுவர்.

ஒரு தடவை பெருமானார் (ஸல்) அவர்கள் தம் தோழர்களை நோக்கி, "ஒருவன் ஹஜ்ஜுக் கடனை நிறை வேற்றி மார்க்கப் போர் ஒன்றில் ஈடுபடுவானாயின் அதற்காக அவனுக்கு நானூறு ஹஜ் செய்த நற்பேறு உண்டு என்று கூறினர். அப்பொழுது நபித்தோழர்களில் போரில் ஈடுபட இயலாது பலஹீனர்களாகவும் நோயுற்றவர்களாக வும் இருந்த சிலர் மனத்துயருற்ற பொழுது இறைவன் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு 'வஹீ' மூலம் "நபியே! உம்மீது ஒருவன் ஸலவாத்துக் கூறின் நானூறு ஹஜ்ஜுக்கு நிகராகக் கூடிய நானூறு மார்க்கப் போர் இயற்றிய நற்பலனை அவனுக்கு வழங்கப்படும்" என்று செய்தி அறி வித்தான் எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் இயம்பினர்.

## மூன்று ஸலவாத்துகளுக்குரிய நன்மைகள்

"ஒரு நாள் ஜிப்ரீல் என்னிடம் வந்து, 'முஹம்மதே! தங்களுக்கு முன்வந்த நபிமார்கள் எவருக்கும் கொண்டு வராத நற்செய்தி ஒன்றை இன்று தங்களுக்கு கொண்டு வந்துள்ளேன். அதாவது தங்களின் உம்மத்களில் ஒருவன் தங்கள் மீது மூன்று தடவை ஸலவாத்துச் சொல்லின் அமர்ந்து சொன்னவன் எழு முன்னரும் நின்று சொன்னவன் அமரு முன்னரும் அவனுடைய பாவத்தைப் பொறுத்து விடுவேன்' என்று இறைவன் மொழிந்ததாகக் கூறியதாக" எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இயம்பினர்.

இந்த அருட் செய்தி இறைவனிடமிருந்து வந்ததும் பெரிதும் புளகாங்கிதமுற்ற அவர்கள் அவனுக்கு நன்றி செலுத்து முகத்தான் ஸஜ்தா (சிர வணக்கம்) செய்தனர்.

## பத்து ஸலவாத்துக்குரிய நன்மைகள்

"ஒருவன் என் மீது பத்துத் தடவை ஸலவாத்துக் கூறின் அவன் மீது அல்லாஹ் நூறு தடவை ஸலவாத்துச் சொல் வான்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் அமுதவாய் விண்டனர்.



மேலும் அவர்கள் இயம்பினர்: "ஒரு நாள் என்னிடம் ஜிப்ரீலும் மீக்காயிலும், இஸ்ராஃபிலும், இஸ்ராயீலும் வந்தனர். அப்பொழுது ஜிப்ரீல் என்னை நோக்கி, 'ஒருவன் தங்கள் மீது பத்து ஸலவாத்துக்களைச் சொல்லின் நான் அவனைக் கைபிடித்து ஸிராத்தல் முஸ்தகீம் பாலத்தில் அழைத்துச் செல்வேன்' என்று கூறினார். பின்னர் மீக்காயீல் என்னை நோக்கி, 'நான் அவனை ஹௌலுல் கௌதருக்கு அழைத்துச் சென்று அதன் இனிய நீரை அருந்தச் செய்வேன்' என்று கூறினார். அதன் பின் இஸ்ராஃபீல் என்னை நோக்கி, 'நான் இறைவன் முன்னிலையில் சுஜூதில் வீழ்ந்து அவனின் பவம் பொறுத்தருளுமாறு இறைஞ்சுவேன். இறைவன் அவனின் பவம் பொறுக்கும் வரை நான் என் தலையைத் தரையிலிருந்து கிளப்ப மாட்டேன்' என்று கூறினார். பின்னர் இஸ்ராயீல் என்னை நோக்கி, 'நான் நபிமார்களின் உயிரைக் கைப்பற்றுவது போன்று அவனுடைய உயிரைக் கைப்பற்று வேன்' என்று கூறினார்.

## இருபது ஸலவாத்துகளுக்குரிய நன்மைகள்

"ஒருவன் என் மீது ஒவ்வொரு நாள் காலையில் பத்து ஸலவாத்துகளும் மாலையில் பத்து ஸலவாத்துகளும் வழக்கமாக ஓதிவரின் அவனுக்கு நான் மறுமையில் இறை வனிடத்தில் பரிந்துரை (ஷஃபாஅத்) செய்வேன்" என்ற பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினர்.

## நூறு ஸலவாத்துகளுக்குரிய நன்மைகள்

"ஒருவன் என்மீது நூறு தடவை ஸலவாத்துச் சொல் லின் இறைவன் அவனுடைய இரண்டு புருவங்களுக் கிடையில் முனாஃபிக்தனத்தை (நயவஞ்சகத்தை) விட்டும் நரகத்தை விட்டும் உரிமை பெற்றான் என்ற சீட்டை எழுதி மறுமையில் அவனை மார்க்கத்திற்காக உயிர் நீத்த தியாகி களின் அணியில் அமரச் செய்வான்."

"ஒருவன் என் மீது நாள்தோறும் நூறு ஸலவாத்து களைக் கூறிவரின் அவனுடைய நூறு தேவைகளை இறைவன் நிறைவேற்றித் தருவான். அவற்றில் எளிதானது அவன் நரகத்தை விட்டும் உரிமை பெறுவதாயிருக்கும்."

மற்றொரு ரிவாயத்தின்படி "அந்த நூறு தேவைகளில் முப்பது இவ்வுலகிலும் மீதியுள்ளவை மறுமையிலும் நிறைவேற்றப்படும்" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இயம்பினர்.

பகை நீங்க:- பகைவனால் துன்பத்திற்காளானவன் ஒலுவுடன் நூறு தடவை ஸலவாத்துகளை ஓதி இறைவனிடம் பகை நீக்கியருளுமாறு ஏழு நாட்கள் தொடர்ந்து இறைஞ்சிவரின் அவனுடைய பகைமை நீங்கிவிடும் என காஜா முயீனுத்தீன் சிஸ்தி (ரஹ்) கூறியுள்ளனர்.

## ஐந்நூறு ஸலவாத்துகளுக்குரிய நன்மைகள்

"ஒருவன் என் மீது ஐந்நூறு ஸலவாத்துகளை வழக்கமாக ஓதிவரின் அவன் ஒருபோதும் வறுமைக்குள்ளாக மாட்டான்" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர்.

அவனுக்கு காமிலான ஷைக் கிடைக்காவிட்டாலும் அவனுக்கு அந்த ஸலவாத்துகளே காமிலான ஷைகைப் போன்று நற்பலன் நல்கும் என்று பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

## ஆயிரம் ஸலவாத்துகளுக்குரிய நன்மைகள்

ஒருவன் என்மீது நாள்தோறும் ஆயிரம் ஸலவாத்துகளை ஓதிவரின் சுவனத்தில் தான் வாழப்போகும் இடத்தைக் காணாத வரையில் அவன் இறப்பெய்த மாட்டான்.

"ஒருவன் என்மீது ஆயிரம் தடவை ஸலவாத்துச் சொல்லின் அல்லாஹ் அவனுடைய உடலை நரகத்தை விட்டும் ஹராமாக்கி வைத்து இம்மையிலும் மறுமையிலும் அவனுடைய நிலையைச் செம்மைப்படுத்தி மறுமையில் அவனிடம் கேள்வி, கணக்குக் கேட்கும் பொழுது அவற்றிற்கு மறுமொழி பகரும் சக்தியையும் அவனுக்கு நல்கி ஸிராத்தல் முஸ்தகீம் பாலத்தை எளிதில் கடக்கும் ஆற்றலையும் அவனுக்கு வழங்குவான். அவன் கூறிய ஒவ்வொரு ஸலவாத்துக்கும் பகரமாக சுவர்க்கத்தில் அவனுக்கு ஒரு மாளிகையைக் கொடுப்பான். மேலும் அவன் என் மீது ஆயிரம் ஸலவாத்துச் சொன்னதன் காரணமாக அவனுடைய புயமும் என்னுடைய புயமும் சுவர்க்கத்தின் வாயலில் நெருக்கமாய் இருக்கும். (அதாவது சுவர்க்கத்தில் என்னுடன் புகுவான்)" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தனர்.



நாளொன்றுக்கு ஆயிரம் ஸலவாத்துகள் வீதம் ஓதி வந்த ஒருவர் ஒருநாள் ஓத மறந்துவிட்ட பொழுது எம்பெருமானார் (ஸல்) அவரின் கனவில் திருத்தோற்றம் வழங்கி அவரின் தலையைத் தடவி "என் மீது ஸலவாத்து ஓத மறந்து விட்டீரே, ஏன்?" என்று வினவி விட்டு மறைந்தனர் என்றும் விழித்துப் பார்க்கும் பொழுது அவர்களின் கைத்தடம் அவரின் தலையில் பதிந்திருந்ததென்றும் அதன் பின் அவர் நாளொன்றுக்கு பதினாயிரம் ஸலவாத்துகள் வீதம் ஓதி வந்தாரென்றும் ஒரு வரலாறு உள்ளது.

## ஸலவாத்து ஓதுவதனால் ஏற்படும் பொதுவான நன்மைகள்

இனி ஸலவாத்தை ஓதி வருவதனால் ஏற்படும் பொதுவான நன்மைகளைக் கவனிப்போம்:

எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினர்: "ஓராண்டு வரையிலும் குழந்தைகள் அழும்பொழுது அழுகையை நிறுத்துமாறு அடிக்க வேண்டாம். ஏனெனில் அதன் முதல் நான்கு மாத அழுகை லா இலாஹ இல்லல்லாஹு" என்ற கலிமாவாக இருக்கும். அடுத்த நான்கு மாத அழுகை என் மீது ஸலவாத்தாகும். அடுத்த நான்கு மாத அழுகை அது தன் தாய் தந்தையருக்காக இறைஞ்சும் இறைஞ்சுதலாகும்.

"உங்களுடைய வீடுகளைக் கப்ர்களாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். என் மீது ஸலவாத்து ஓதுங்கள். நீங்கள் எங்கிருந்து ஸலவாத்து ஓதிய போதினும் அது என்னை வந்தடையும்."

நண்பர்கள் இருவர் ஒருவர் மற்றவரைப் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் என் மீது ஸலவாத்துக் கூறின் அவர்கள் பிரியும் பொழுது அவர்கள் இருவரும் செய்த பாவங்களும் பொறுக்கப்படும்.

ஒருநாள் ஜிப்ரீல் என்னிடம் வந்து, "முஹம்மதே! ஒவ்வொன்றுக்கும் நாயகம் உண்டு. மனிதர்களுக்கு நாயகம் ஆதம். ஆதமுடைய மக்களுக்கும் ஏனைய படைப்புகள் அனைத்திற்கும் நாயகம் தாங்கள். ரூமிகளுக்கு நாயகம் ஷுஐப், பார்ஸிகளுக்கு நாயகம் ஸல்மான், ஹபஷிகளுக்கு நாயகம் பிலால், பறவைகளுக்கு நாயகம் ராஜாளி, மாதங்களுக்கு நாயகம் ரமலான், நாட்களுக்கு நாயகம் வெள்ளிக்கிழமை, மொழிகளுக்கு நாயகம் அரபி, அரபி மொழிக்கு நாயகம் அல்குர்ஆன், அல்குர்ஆனுக்கு நாயகம் அல்பகரா, நற்செயல்களுக்கு நாயகம் தங்கள் மீது ஸலவாத்துக் கூறுவதாகும்" என்று சொல்லி விட்டுச் சென்றனர்.

மற்றொரு நாள் ஜிப்ரீல் என்னிடம் வந்து 'முஹம்மதே! ஒருவன் தங்கள் மீது ஸலவாத்துச் சொல்வானாயின் அவன் மீது எழுபதாயிரம் வானவர்கள் ஸலவாத்துச் சொல்கிறார்கள். ஒருவன் மீது வானவர்கள் ஸலவாத்துச் சொல்லின் அவன் சுவர்க்க வாசிகளில் ஒருவனாகி விட்டான்' என்று கூறினார்.

அல்லாஹ்வின் வானவர்களில் சிலர் ஒளியாலான காகிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு விண்ணில் உள்ளனர். அவர்கள் என் மீதும் என் குடும்பத்தார் மீதும் ஓதப்படும் ஸலவாத்தைத் தவிர வேறொன்றையும் எழுத மாட்டார்கள்.

"ஒருவன் என் மீது ஸலவாத்துக் கூறின் அந்த ஸலவாத்து அவனுடைய வாயிலிருந்து தீவிரமாக வெளிப்பட்டு எழுவான், படுவான் பகுதிகளெல்லாம் கடந்து 'நான் இன்னானின் மகன், இன்னான் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது சொன்ன ஸலவாத்தாக இருப்பேன்' என்று கூறும். அதைக் கேட்டுப் படைப்பினங்கள் அனைத்தும் அவன் மீது ஸலவாத்துச் சொல்லும்.

அல்லாஹ்விடம் ஒரு வானவர் உள்ளார். அவருக்கு அல்லாஹ் உலகத்திலுள்ள படைப்புகள் அனைத்தும் சொல்வதைச் செவியுறும் தன்மையை அளித்துள்ளான்.



நான் இறப்பெய்தியதும் அவர் என்னுடைய அடக்க இடத்தில் வந்து அமர்வார். ஒருவர் தூய உள்ளத்துடன் ஸலவாத்துச் சொல்லின் அவர் அதனைச் செவியுற்று என்னிடம், 'இன்னார் தங்கள் மீது ஸலவாத்துச் சொன்னார்' என்று கூறுவார். அப்பொழுது அல்லாஹ் அவர் கூறிய ஒவ்வொரு ஸலவாத்துக்கும் பகரமாக பத்து ஸலவாத்துக் கூறுவான். அவர் என்மீது ஸலவாத்துக் கூறிக் கொண்டிருக்கும் காலமெல்லாம் வானவர்கள் அவர்மீது ஸலவாத்துக் கூறிக் கொண்டிருப்பார்கள்.

என் மீது ஒருவர் ஸலவாத்துச் சொல்லின் அதனை ஒரு வானவர் அல்லாஹ்வின் திருமுன் கொண்டு போய் வைப்பார். 'இதனை என் அடியாரிடம் கொண்டு செல்லுங்கள். அவர் இதைக் கூறியவர் மீது மகிழ்ச்சியுற்று அவருக்காக என்னிடம் பாவ மன்னிப்புக் கோருவார்' என்று அல்லாஹ் கூறுவான்.

ஒருவர் என்மீது ஸலவாத்துச் சொல்லின் அவர் அதனைச் சொல்லி வாய் மூடுமுன் அது என் முன் கொண்டு வரப்படுகிறது. நான் அவருக்காக இறைவனிடம் இறைஞ்சவும் பாவமன்னிப்புக் கோரவும் செய்கிறேன்.

இவ்வாறு எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதும் தோழர்கள் அவர்களை நோக்கி, "தாங்கள் இறந்ததன் பின் மண்ணோடு மண்ணாக உக்கிப் போவீர்களே. எவ்வாறு நாங்கள் ஓதும் ஸலவாத்து தங்களுக்கு எடுத்துக் காட்டப்படும்?" என்று வினவ, "பூமிக்கு நபிமார்களின் உடலை உண்பதை அல்லாஹ் ஹராமாக்கியுள்ளான். எனவே உயிரோடிருக்கும் பொழுது நாங்கள் எவ்வாறு இருந்தோமோ அவ்வாறே நாங்கள் எப்பொழுதும் இருப்போம். எங்களுக்கு உணவும் அளிக்கப்படும்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் பதிலிறுத்தனர்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் என் மீது ஸலவாத்து ஓதுவது உங்களுக்கு இறைவனுடைய திருப்தியைப் பெற்றுத் தரும். உங்களின் செயல்களைத் தூய்மை

யுறச் செய்து அதில் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் வழங்கும். அது மறுமையில் உங்களுக்கு ஸிராத்தல் முஸ்தகீம் பாலத்தில் ஒளி நல்கும்.

"ஒருவன் நரகத்தின் பால் அனுப்பப்படும் பொழுது நான் அவனை நன்மை தின்மைகளை நிறுக்கும் தராசின் பக்கல் மீள வைக்குமாறு கூறி அவன் என் பேரில் கூறிய ஸலவாத்துகளை அத்தராசின் மீது வைப்பேன். அதன் காரணமாக நன்மையின் தட்டு கனத்து அவன் சுவனம் புகுவான்.

"நீங்கள் என் மீது ஸலவாத்துக் கூறின் மற்ற நபிமார்கள் மீது ரஸூல்மார்கள் மீதும் ஸலவாத்துக் கூறுங்கள். ஏனெனில் அல்லாஹ் என்னை நபியாகவும் ரஸூலாகவும் அனுப்பியது போன்று அவர்களையும் ரஸூலாகவும் நபியாகவும் அனுப்பியுள்ளான்."

(இந்த ஹதீதுக்கு ஏற்ற வண்ணம் அமைந்ததே 'ஷம்சுல் கஞ்ச்' என்ற ஸலவாத்தாகும். அதனை ஸலவாத்தின் வகைகள் என்ற தலைப்பில் காண்க.)

## அதிகமதிகமாக ஸலவாத்து ஓதுவதனால் ஏற்படும் நன்மைகள்

எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினர்: "கப்ரில் முதன் முதலாக என்னைப் பற்றியே உங்களிடம் விசாரிக்கப் படும். எனவேதான் என் மீது அதிகமாக ஸலவாத்தை ஓதிவாருங்கள்."

"என் மீது அதிகமாக ஸலவாத்துச் சொல்பவர் மறுமையில் என்னை அதிகமாக நெருங்கியவராக இருப்பார்."

மறுமைத் துன்பங்களிலிருந்து தப்ப விரும்புவோர் என் மீது அதிகமதிகமாக ஸலவாத்தை ஓதி வருவாராக!

என் மீது அதிகமதிகமாக ஸலவாத்து ஓதுபவர்கள் மறுமையில் அர்ஷின் நிழலில் இருப்பர்.



சுவனத்தில் ஒரு மாளிகை உள்ளது. அதில் என் மீது அதிகமதிகமாக ஸலவாத்து ஓதினவர்களேயன்றி வேறு எவரும் நுழையார்.

ஒருவர் தன் வாணாளில் என் மீது அதிகமதிகமாக ஸலவாத்து ஓதிவரின் அவன் இறந்ததன் பின் இறைவன் தன்னுடைய படைப்புகள் அனைத்தையும் அவனுடைய பிழை பொறுக்க இறைஞ்சுமாறு கூறுவான்.

மறுமையில் மக்கள் ஹௌலுல் கௌதருக்கு வருவார்கள். என் மீது ஸலவாத்தை அதிகப்படுத்தியவர்களை நான் அப்பொழுது இலக்குக் கண்டு கொள்வேன். என் மீது ஸலவாத்து ஓதியவர்களின் நா ஒளிர்ந்து கொண்டிருக்கும். ஓதாதவர்களின் நா கறுத்திருக்கும். இதிலிருந்து நான் அவர்களை இலக்குக் கண்டு கொள்வேன்.

"ஒருவனின் நாட்டங்கள் நிறைவேறுவதில் சிரமம் ஏற்படின் அவன் என்மீது ஸலவாத்தை அதிகப்படுத்தவும். அது அவனின் சிரமங்களை நீக்கி, துன்பங்களைப் போக்கி, இரணத்தை அதிகப்படுத்தி, நாட்டங்களையும் நிறைவேற்றிக் கொடுக்கும்."

ஒருவர் எம்பெருமானார் (ஸல்) அவர்களை அணுகி, "நான் 'வஜீஃபா'வில் இருக்கும் நேரத்தில் எவ்வளவு நேரத்தைத் தங்கள் மீது ஸலவாத்துச் சொல்வதற்கு ஒதுக்கச் சொல்கிறீர்கள்?" என்று வினவிய பொழுது, 'உம் விருப்பம்போல் செய்க' என்றனர் அண்ணல். 'கால்பாகத்தை அதற்கு ஒதுக்கவா?' என்று வினவியபொழுது அதே பதிலையே உரைத்த அண்ணல் அவர்கள் அவர் அதனை அரை, முக்கால் என்று உயர்த்திக் கூறியபோதும் அதே பதிலையே உரைத்தனர். இறுதியாக அவர் அண்ணல் அவர்களை நோக்கி, 'நான் வஜீஃபாவில் இருக்கும் முழு நேரத்தையும் அதற்கே ஒதுக்கிவிடவா'' என்று வினவிய பொழுது, "அவ்விதம் செய்வது உம் துன்பங்கள் போக்குவதற்கான அருமருந்தாகவும், உம் பவம் போக்குவதற்கான பரிகாரமாகவும் இருக்கும்'' என்று அருண்மொழி பகர்ந்தனர் அண்ணல்.

மற்றொருவர் அண்ணல் நபி (ஸல்) அவர்களை அணுகி, தம் முழு நேரத்தையும் ஸலவாத்தை ஓதுவதில் செலவழிக்கவா என்று வினவியபொழுது, "அவ்விதம் செய்யின் இறைவன் உம்முடைய இம்மை, மறுமைத் துன்பங்கள் அனைத்தையும் நீக்கப் போதுமானவன்" என்று அவர்கள் அருள்வாய் மலர்ந்தனர்.

பிற்காலத்தில் ஒருவர் அதிகமதிகமாக அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓதி வரும் வழக்கத்தை மேற்கொண்டிருந்ததாகவும் அவரின் கனவில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தோன்றி, 'என்மீது அதிகமதிகமாக ஸலவாத்து ஓதிய வாயைக் காட்டும், நான் முத்தமிட' என்று கூறியதாகவும் அவர் நாணத்துடன் தலையைத் திருப்பிக் கொண்ட பொழுது அவர்களின் கன்னத்தில் முத்தமிட்டதாகவும் அதன் காரணமாக அவரின் கன்னமும் வீடும் ஒரு வாரம் வரை நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்ததென்றும் ஒரு வரலாறு உள்ளது.

## வெள்ளி இரவு, பகல்களில் ஸலவாத்து ஓதுவதனால் ஏற்படும் நன்மைகள்

ஒரு நாள் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தம் தோழர்களை நோக்கி, "நாட்களில் வெள்ளிக்கிழமை மேலானது. அந்த நாளில் தான் ஆதம் (அலை) அவர்கள் படைக்கப்படவும் இறக்கவும் செய்தார்கள். அந்த நாளில்தான் படைப்பினங்கள் அத்தனையும் அழிவுறும், அந்த நாளில் ஸலவாத்தை அதிகமாக ஓதுங்கள்" என்று இயம்பினர்.

மேலும் அவர்கள் கூறினர்: "வெள்ளி இரவிலோ பகலிலோ என் மீது ஸலவாத்துச் சொல்பவர்களின் நூறு தேவைகளை அல்லாஹ் நிறைவேற்றி வைப்பதுடன் அவற்றை என்னிடம் அனுப்பி வைக்குமாறு ஒரு வான வரையும் ஏற்படுத்துவான். அவர் எனக்கு அவற்றை அனுப்பிக் கொண்டே இருப்பார். அவருக்காக நான்



இறைவனிடம் இறைஞ்சவும் மன்னிப்புக் கேட்கவும் செய்வான். அல்லாஹ் ஒளியினால் படைத்த வானவர்கள் சிலர் உள்ளனர். அவர்களின் கையில் ஒளியினாலான காகிதங்களும், பொன்னாலான பேனாக்களும் உள்ளன. வெள்ளி இரவு, பகல் ஆகியவற்றில் தவிர , வேறு எந்நாளிலும் அவர்கள் மண்மீது இறங்கமாட்டார்கள். வெள்ளி இரவு, பகல் ஆகியவற்றில் ஓதப்படும் ஸலவாத்தைத் தவிர்த்து வேறொன்றையும் அவர்கள் எழுதவும் மாட்டார்கள். இதுவே அவர்களின் அலுவலாகும்.

"வெள்ளியன்று ஒருவன் என்மீது எண்பது ஸலவாத்துக்களை ஓதின் அவனுடைய எண்பது ஆண்டுப் பாவங்கள் பொறுக்கப்படும்" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினர். அது கேட்டுத் தோழர்கள், "எவ்விதம் தங்கள் மீது ஸலவாத்துக் கூறுவது?" என்று வினவிய பொழுது "அல்லாஹும்ம ஸல்லி அலா ஸையிதினா முஹம்மதின் அப்திக வநபிய்யிக வரஸூலிக்கன் நபிய்யில் உம்மிய்யி என்று ஓதி ஒரு விரலை மடக்கிக் கொள்ள வேண்டும்" (எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்காக) என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் பதிலிறுத்தார்கள்.

அவர்கள் மேலும் கூறினர்: "வெள்ளிக்கிழமை அஸர் தொழுகை தொழுத பின் எண்பது தடவை ஸலவாத்து ஓதியவனுக்கு எண்பது ஆண்டுப் பாவங்கள் பொறுக்கப்படுவதுடன் எண்பது ஆண்டு வணக்கத்தின் பலனும் எழுதப்படும்.

"வெள்ளியன்று ஒருவன் என்மீது நூறு ஸலவாத்துக்களை ஓதின் மறுமையில் அவனுடன் பேரொளி ஒன்று வரும். அதை மஹ்ஷர் வெளியிலுள்ள அனைவருக்கும் பங்கிட்டுக் கொடுக்கப் பெறினும் அது போதுமானதாயிருக்கும்.

"வெள்ளிக்கிழமை ஒருவன் என்மீது நூறு ஸலவாத்துக்களை ஓதின் அவனுடைய எண்பது ஆண்டுப் பாவங்கள் மன்னிக்கப்படும்.

"ஒருவன் வெள்ளி இரவிலோ பகலிலோ என்மீது நூறு ஸலவாத்துக்களை ஓதின் அல்லாஹ் அவனுக்கு நூறு தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்து அவனைக் கப்ரில் அடக்கும் நேரத்தில் ஒரு வானவரை அவனிடம் அனுப்பி வைப்பான். அவர் அவனுக்கு கவனத்தைக் கொண்டு நன் மாராயம் மொழிவார்.

"ஒருவன் வெள்ளிக்கிழமை என்மீது ஆயிரம் ஸலவாத்துக்களை ஓதினால் கவனத்தில் அவன் இருக்கும் இடத்தைக் கண்டு கொள்ளாமல் இறப்பெய்த மாட்டான்.

"வெள்ளி இரவிலும் பகலிலும் என்மீது அதிகமாக ஸலவாத்து ஓதுங்கள். ஒருவன் அவ்விதம் செய்யின் நான் மறுமையில் அவனுக்குச் சாட்சி கூறுபவராகவும் மன்றாடு பவராகவும் ஆகி விடுவேன்."

"வெள்ளியன்று ஓதப்படும் ஸலவாத்தை ஒருவன் (பூமியில் எங்கிருந்து ஓதிய போதினும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களின் இரண்டு காதுகளால் கேட்பர். பக்தியோடும் அன்போடும் கூறுகிறவனின் ஸலவாத்தை எம்பெருமானார் (ஸல்) அவர்கள் நேரடியாகக் கேட்பர். பக்தியோடும் அன்போடும் இல்லாது சொல்லப்படும் ஸலவாத்தை வானவர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர் களுக்கு எத்தி வைப்பர்" என்று 'ஷரஹுல் ஃபலாயிலு' என்னும் நூலில் ஸமாலவி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார் கள்.

எனவேதான் "நான் எல்லா நிலைகளிலும் எம்பெருமா னார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வதை விரும்புகிறேன். வெள்ளி இரவிலும் பகலிலும் ஸலவாத்துக் கூறுவதை நான் அதிகமாகவிரும்புகிறேன்" என்று இமாம் ஷாஃபியீ (ரஹ்) அவர்கள் கூறினர்.

எனவேதான் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்களும் "வெள்ளிக்கிழமை நாட்களின் ஸையிதாகும். எம்பெருமா னார் (ஸல்) அவர்களும் படைப்புகளின் ஸையிதாவார்கள் ஸையிதான நாளில் ஸையிதான எம்பெருமானார் (ஸல்



அவர்கள் மீது வணக்கங்களில் ஸையிதான ஸலவாத்தை ஓதுவது நிரப்பமான, அதிக நற்கூலி அளிக்கக்கூடிய, மேலான வணக்கமாக உள்ளது. எனவேதான் வெள்ளி பகல் இரவுகளில் அதிகமாக ஸலவாத்தை ஓதுமாறு எம்பெரு மானார் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளனர். ஆதலின் வெள்ளியன்று ஸூரத்துல் கஃபை ஓதுவதைத் தவிர்த்து உள்ள ஏனைய ஸூராக்களை ஓதுவதை விட ஸலவாத்தை ஓதுவது மேலானதாகும்" என்று இயம்பினர்.

எனவேதான் இந்நாளில் ஓதுப்படும் ஸலவாத்துக்கள் வேறு எந்நாளிலும் ஓதப்படும் ஸலவாத்துக்களை விடத் தனிச் சிறப்புடையது என்று ஆன்றோர்கள் கூறியுள்ளார் கள்.

## ஷஃபான் மாதத்தில் ஸலவாத்து ஓதுவதனால் ஏற்படும் நன்மைகள்

"ஷஃபான் ஷஃரிய்யி' (ஷஃபான் என்னுடைய மாதம்) என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இயம்பியுள்ளனர். எனவே இம்மாதத்தில் ஸலவாத்தை அதிகமதிகமாக ஓதுகிறவர்களுக்கு எண்ணிலடங்கா வானவர்கள் கியாம நாள் வரையிலும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருப்பர்" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந் துள்ளனர்.

'துஆ'வுக்கு முன்னும் பின்னும் ஸலவாத்து ஓது வதனால் ஏற்படும் நன்மைகள்

"ஒருவன் தான் கேட்கும் 'துஆ'வுக்கு முன்னும் பின்னும் என்மீதும் என் குடும்பத்தினர் மீதும் ஸலவாத்து ஓதின் அந்த 'துஆ' இறைவனால் அங்கீகரிக்கப்படும். இல்லையெனில் இல்லை" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இயம்பியுள்ளனர்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: "இறைவனிடம் கேட் கப்படும் எந்த 'துஆ'வுக்கும் என் மீது ஸலவாத்துச் சொல்கின்ற வரை அந்த 'துஆ'வுக்கும் வானத்திற்கும்

இடையே திரை ஏற்பட்டு விடும். என் மீது ஸலவாத்துச் சொல்லின் அந்த 'துஆ' அந்தத் திரையைக் கிழித்துக் கொண்டு விண்ணகம் சென்று இறைவனின் இணக்கத்தைப் பெறும். இல்லையெனில் பயனின்றித் திரும்பி விடும். எனவே நீங்கள் என் மீது ஸலவாத்துக் கூறுவது உங்களுடைய 'துஆ'வுக்கு ஓர் அரணாகவும் இறைவனின் திருப்பொருத்தத்தைப் பெற்றுத் தருவதற்குக் காரணமாகவும் உள்ளது."

எனவேதான் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களும், "நீங்கள் 'துஆ' கேட்கும் பொழுது ஸலவாத்தைக் கொண்டு துவங்கி ஸலவாத்தைக் கொண்டு முடியுங்கள். உங்களுடைய 'துஆ'வை அல்லாஹ் ஏற்றுக் கொண்டாலும் கொள்ளலாம். மறுத்தாலும் மறுக்கலாம். ஆனால் எந்த ஸலவாத்தையும் அவன் ஏற்றுக் கொள்வதேயன்றி மறுப்பதில்லை. எனவே அதன் பரக்கத்தினால் உங்களுடைய 'துஆ'வையும் அவன் ஏற்றுக் கொள்ளப் போதுமானவன்" என்று கூறியுள்ளார்கள்.

எனவேதான் அபூ ஸுலைமான் தாரானி (ரஹ்) அவர்களும் "எல்லா வணக்கங்களும் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படவோ மறுக்கப்படவோ செய்யும். ஸலவாத்து மட்டுமே இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படுமேயன்றி ஒரு போதும் மறுக்கப்படுவதில்லை. எனவே 'துஆ' கேட்பதற்கு முன் ஸலவாத்தைக் கூறித் துவங்குங்கள். பின்னர் உங்களின் தேவைகளை இறைவனிடம் கூறி அதன்பின் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓதி 'துஆ'வை முடியுங்கள். ஏனெனில் அல்லாஹ் தன் ஹபீப் மீது ஓதப்பெறும் இரு ஸலவாத்துக்களையும் ஏற்றுக் கொண்டு அவற்றிற்கு இடையில் இருக்கும் தன் அடியானின் 'துஆ'வை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாதிரான்" என்று கூறியுள்ளார்கள்.

மேலும் எம்பெருமானார் (ஸல்) அவர்களைக் கொண்டு வஸீலாத் தேடி இறைவனிடம் 'துஆ' இறைஞ்சுவது அந்த 'துஆ' விரைவில் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான சிறந்த வழியாகும். எம்பெருமானார் (ஸல்) அவர்களைக் கொண்டு வஸீலாத் தேடி இறைஞ்சுவதென்றால், "இறைவனே! என்னுடைய இந்த இறைஞ்சுதலை எம்பெருமானார் (ஸல்) அவர்களின் பொருட்டு நிறைவேற்றித் தா" என்று வேண்டுவதேயாகும். இரு நூற்றாண்டுகளாக அழுது சலித்தும் தம் பவம் பொறுக்கப் பெறாததைக் கண்ட ஆதம் (அலை) அவர்கள் பின்னர் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் பொருட்டால் தம் பவம் பொறுத்தருளுமாறு வேண்டியதன் பின்னரே பவம் பொறுக்கப்பட்டு இறைவனால் ஆட்கொள்ளப்பட்டனர் என்று நாம் முன்னர் கூறியுள்ளோம்.



எம்பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு குருடர் அவர்களை அணுகி, தமக்குக் கண்ணொளி நல்குமாறு இறைவனிடம் இறைஞ்சுமாறு வேண்ட அதனைப் பொறுத்துக் கொள்ளுமாறு கூறினர் எம்பெருமானார். அதனால் தமக்கு ஏற்படும் சிரமங்களையும் தம்மைக் கைப்பிடித்து அழைத்துச் செல்லக்கூட ஒருவரும் இல்லாத அவல நிலையையும் அவர் அழாக் குறையாக எடுத்துரைத்த பொழுது, "நல்லது; உலூச் செய்து பள்ளி சென்று இரண்டு ரக்அத்கள் நஃபில் தொழுகை தொழுது என் பொருட்டு உமக்குப் பார்வை நல்குமாறு இறைவனிடம் இறைஞ்சும்" என்று கூறினர் அண்ணல். அவ்விதமே அவர் செய்ய அவருடைய கண்கள் ஒளி பெற்றன என்று உதுமான் இப்னு ஹனீஃப் (ரலி) அவர்கள் கூறுகின்றனர்.

ஒரு தடவை உமர் (ரலி) அவர்களின் காலத்தில் மழை பெய்யாது பஞ்சம் ஏற்பட்டபொழுது உமர் (ரலி) அவர்கள் அப்பாஸ் (ரலி) அவர்களையும் மக்கள் அனைவரையும் ஊருக்கு வெளியே அழைத்துச் சென்று மழைக்கான தொழுகை தொழுது "இறைவனே! எம்பெருமானார் (ஸல்) அவர்கள் இப்பொழுது எங்களுடன் இல்லை. அவர்களின் சிறிய தந்தை அப்பாஸ் (ரலி) அவர்கள்தாம் இப்பொழுது எங்களுடன் உள்ளனர். எனவே அவர்களின் பொருட்டாலாவது எங்களுக்கு மழையைப் பொழியச் செய்வாயாக!" என்று இறைஞ்சியபொழுது அடுத்தக் கணமே மழை பொழிந்தது என்று இப்னு ஹல்லிகான் கூறுகின்றார்.

அவ்விதமாயின் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் பொருட்டால் நிறைவேற்றித் தருமாறு ஸலவாத்துடனும் ஸலாமுடனும் இறைவனிடம் இறைஞ்சப்படும் 'துஆ'க்கள் இறைவனால் விரைவில் நிறைவேற்றித் தரப்படும் என்பதில் என்ன ஐயம் உள்ளது?

## எழுதும்பொழுது ஸலவாத்தைச் சேர்த்து எழுதுவதனால் ஏற்படும் நன்மைகள்

எழுத்தாளர்களுக்கு ஓர் அருளுரையாக எம்பெருமானார் (ஸல்) அவர்கள் பின்வருமாறு இயம்பினர்: "ஒருவன் தான் எழுதும் நூலில் என் பெயர் வருந்தொறும் அத்துடன் ஸலவாத்தையும் சேர்த்து எழுதுவானாயின் என் பெயர் அந்நூலில் இருக்கும் காலமெல்லாம் வானவர்கள் அந்நூலை எழுதியவனுக்குப் பிழை பொறுக்கத் தேடியவர்களாக நீங்காது இருந்து கொண்டிருப்பர்."

மேலும் "ஒருவன் தன் நூலில் பல அறிவுரைகளை எழுதி அத்துடன் என்மீது ஸலவாத்தையும் எழுதினால் அது மக்களால் படிக்கப்படும் காலம் வரை அவன் அதற்கான நற்பலன்களை எய்தப் பெற்றுக் கொண்டிருப்பான்."

எம்பெருமானர் (ஸல்) அவர்களின் திருப்பெயர் வருந்தோறெல்லாம் ஸலவாத்தை எழுதி வந்ததன் காரணமாக, இறைவன் மறுமையில் ஹதீதுக் கலைகளை எழுதியவர்களை நோக்கி, "நீங்கள் என்னுடைய ஹபீபின் மீது அதிகமதிகமாக ஸலவாத்தைச் சொன்னவர்கள். எனவே சுவனம் சென்று இனிதே வாழுங்கள்" என்று கூறுவானென்றும் ஒரு ஹதீது உள்ளது.

ஹதீதுகளை எழுதி வந்த சிலர் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் பெயருக்குப் பின் ஸலவாத்தை எழுதத் தவறிய பொழுது பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களின் கனவில் திருத்தோற்றம் வழங்கி, 'ஏன் என் பெயருக்குப் பின் ஸலவாத்தைப் பொறிக்கவில்லை?" என்று கேட்டதாகவும் பின்னர் அவர்கள் அவ்வாறே பொறித்தபொழுது எம்பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களின் கனவில் திருத்தோற்றம் தந்து, "இப்பொழுது உம் ஸலவாத்துக்கள் என்னிடம் வந்து கொண்டிருக்கின்றன" என்று திருவாய் மலர்ந்ததாகவும் வரலாறுகள் உள்ளன.



தாம் எழுதிய நூல்களில் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் திருப்பெயருக்குப்பின் ஸலவாத்தையும் எழுதி வந்ததன் காரணமாக, தமக்கு இறை மன்னிப்புக் கிடைத்ததாகவும் தம் முன் பேரொளி இலங்கிக் கொண்டிருப்பதாகவும் தாம் கிரீடாதிபதியாக இருப்பதாகவும் எவருடைய கண்ணும் கண்டிராத எவருடைய காதும் கேட்டிராத எவருடைய உள்ளமும் எண்ணி இராத பெரும் பேற்றினைத் தாம் பெற்றிருப்பதாகவும் தாம் வானவர்களுக்கு இமாமாக இருந்து தொழ வைத்துக் கொண்டிருப் பதாகவும் சிலர் சிலருடைய கனவுகளில் தோன்றி இயம்பியுள்ளனர்.

## ஸலவாத்துக் கூறாதவனுக்கு ஏற்படும் கேடுகள்

இதுவரை ஸலவாத்தை ஓதுவதனால், எழுதுவதனால் ஏற்படும் மாண்பினையும் மகத்துவத்தையும் ஆராய்ந்தோம். இனிமேல் அதனை ஓதாததனால் ஏற்படும் தீமையையும் இழிவையும் பற்றிக் கவனிப்போம்.

அனஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "ஷஃபான் மாதக் கடைசியில் ஒரு நாள் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் குத்பா ஓத மிம்பரின் (மேடையில்) முதல்) படியில் ஏறிய பொழுது 'ஆமீன்' என்று கூறினர். இரண்டாம் படியில் ஏறிய பொழுது 'ஆமீன்' என்று கூறினர். மூன்றாம் படியில் ஏறிய பொழுதும் 'ஆமீன்' என்று கூறினர். இதற்கான காரணத்தை வினவப்பட்ட பொழுது, "நான் முதல் படியில் ஏறியதும் ஜிப்ரீல் வந்து,'ரமலான் மாதத்தில் எவன் நோன்பு நோற்று அதன் காரணமாக அவன் பவம் பொறுக்கப் பெறவில்லையோ அவன் அல்லாஹ்வின் பேரருளை விட்டும் தொலைவிலாகி நரகம் புகுந்து விட்டான்' என்று கூறினர். நான் ஆமீன் என்றேன்.

"இரண்டாவதாக, 'எவன் பெற்றோர்களில் ஒருவரையோ இருவரையோ பெற்று அவர்களுக்கு நன்றி செலுத்தவில்லையோ அவன் அதன் காரணமாக அல்லாஹ்வின் பேரருளை விட்டும் தொலைவிலாகி நரகம் புகுந்து விட்டான்' என்று கூறினர். நான் ஆமீன் என்றேன்.

"மூன்றாவதாக, 'தங்களின் பெயர் கூறப்படும் பொழுது ஸலவாத்துக் கூறாதவன் எவனோ அவன் அல்லாஹ்வின் பேரருளை விட்டும் தொலைவிலாகி நரகம் புகுந்து விட்டான்' என்று கூறினர். நான் ஆமீன் என்றேன்" என்று இயம்பினர்."

ஓரிரவு ஆயிஷா (ரலி) அவர்கள் விளக்கு வெளிச்சத்தில் வைத்துச் சட்டை தைத்துக் கொண்டிருந்த பொழுது விளக்கு அணைந்து விடவே பெரிதும் வருத்தமுற்றனர். அப்பொழுது எம்பெருமானார் (ஸல்) அவர்கள் ஆங்கு வரவே அவ்விடம் முழுவதும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் முகத்தில் இலங்கிய பேரொளியால் பொலிவுற்று விளங்கியது. அது கண்டு அவர்கள் ஆனந்த பரவசமாகி எம்பெருமானார் (ஸல்) அவர்களின் முக ஒளியைப் போற்றிப் புகழ்ந்த பொழுது, "என் முக ஒளியை மறுமையில் எவர் காண மாட்டார்களோ அவர்களுக்கே கேடு" என்றனர் அண்ணல். 'அவர்கள் யார்?' என்று நாயகியார் கேட்க 'உலோபி' என்றனர் அண்ணல். 'யார் அந்த உலோபி' என்று அவர்கள் மீண்டும் வினவ, "என் பெயர் கூறப்பட்ட பொழுது ஸலவாத்துக் கூறாதவனே அந்த உலோபி" என்றனர் எம்பெருமானார்.

எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினர்: 'மூன்று கூட்டத்தினர் மறுமையில் என் முகத்தைக் காணமாட்டார்கள். அவர்கள், (1) பெற்றோரை நோவினை செய்தவர்கள், (2) என் சுன்னத்தை (வழி முறையை) கை விட்டவர்கள், (3) என் பெயரைக் கேட்டபொழுது என்மீது ஸலவாத்துக் கூறாதவர்கள்.

"என் பெயர் கூறப்படும்பொழுது என்மீது ஸலவாத்துக் கூறாதிருப்பது அக்கிரமமாகும்.

"என்மீது ஸலவாத்து கூறுவதை ஒருவன் மறந்து விடின் திட்டமாக, அவன் சுவர்க்கத்தின் பாதையை மறந்து விடுவான்.

"என் பெயர் கூறப்பட்டு அதுகேட்டு ஒருவன் ஸலவாத்துக் கூறவில்லையாயின் திட்டமாக அவன் நிர்ப்பாக்கியவானாகி விட்டான். அவன் முகம் பங்கமாகக் கடவது.



"மேலும் அவன் என்பாற்பட்டவனுமல்லன். நான் அவன் பாற்பட்டவனுமல்லன்.

"என்னுடன் சேர்ந்து நடந்தவனை நீங்களும் சேர்ந்து நடங்கள். அவ்விதம் செய்யாதவனை நீங்கள் தவிர்ந்து கொள்ளுங்கள்."

இதே கருத்துக்கள் பொதிந்த ஹதீதுகள் இன்னும் எத்தனையோ உள்ளன. எனவேதான் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்களும், "எம்பெருமானார் (ஸல்) அவர்களின் பெயர் கேட்டு ஸலவாத்துக் கூறாதிருப்பது பெரும் பாவம்" என்று இயம்பினர்.

### மஜ்லிஸில் கூடி இருப்பவர்களுக்கு அருள் எச்சரிக்கை

"மக்கள் ஒருங்கு கூடி இருந்து அவர்கள் அல்லாஹ்வைத் துதிக்காமலும் என்மீது ஸலவாத்துக் கூறாமலும் பிரிந்து விடுவார்களானால் அவர்களை மறுமையில் கைசேதம் சூழ்ந்து கொள்ளும்.

"மக்கள் ஒருங்கு கூடி இருந்து அவர்கள் அல்லாஹ்வைத் துதிக்காமலும் என்மீது ஸலவாத்துக் கூறாமலும் பிரிந்த விட்டால் அவர்களைத் துன்பம் சூழ்ந்து கொள்ளும். இறைவன் நாடின் அவர்களை வேதனை செய்வான். அவன் நாடின் மன்னித்து விடவும் செய்யலாம்" இவ்வாறு எம் பெருமானார் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

ஒருவேளை அவர்கள் தங்களின் மற்ற வணக்கங்களால் சுவனம் எய்திய போதினும் ஸலவாத்துச் சொல்லாததனால் ஏற்பட்ட குறை அவர்களின் மனதை உறுத்திக் கொண்டே இருக்கும். ஸலவாத்தை அதிகமதிமாக ஓதி நாம் சுவனப் பெருவாழ்வை நிறைவு செய்யத் தவறி விட்டோமே என்று அவர்கள் வருந்துவர் என்றும் கூறப்படுகிறது.

### ஸலவாத்தை ஓதும் பொழுது மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள்

ஸலவாத்தை ஓதும் பொழுது தூய உடை அணிந்து தூய்மையுடன் இருப்பது சிறப்புடைத்தாகும். 'உலூ'வுடன் இருந்து ஓதுவது மாண்பாகும். 'உலூ' வின்றியும் ஓதலாம்.

அடக்கத்தோடும் அச்சத்தோடும் எம்பெருமானார் (ஸல்) அவர்களிடம் உள்ளன்போடும் ஓத வேண்டும். வெளியே காட்டிக் கொள்வதற்காக அவயவங்களை ஆட்டி அசைத்து ஓதக் கூடாது.

தவறான ஒழுக்கங்களுடைய ஒருவர் சுவனத்தில் இருப்பதாகக் கனவு கண்டு அவரிடம் அதற்கான காரணத்தை வினவிய பொழுது பேச்சாளர் ஒருவர் ஸலவாத்தை சப்தமிட்டுக் கூறுபவன் சுவனம் புகுவான் என்று சொன்னதைச் செவிமடுத்துத் தாம் ஸலவாத்தைச் சப்தமிட்டுக் கூறி வந்ததாகவும் அது கேட்டு மற்றவர்களும் அவ்விதமே செய்தார்களென்றும் அதன் காரணமாக இறைவன் தம் பவம்பொறுத்து சுவனம் புகச் செய்தான் என்று கூறியதாகவும் 'தன்பீஹுல் காபிலீன்' என்ற நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

எனவே ஸலவாத்தைச் சப்தமிட்டுக் கூறுவது முஸ்தஹப்பு (விரும்பத்தக்கது) என்று இமாம் நவவீ (ரஹ்) அவர்கள் கூறியுள்ளனர். ஆனால் பள்ளியில் பிறர் தொழுது கொண்டிருக்கும் பொழுது அவர்களின் தொழுகைக்கு இடையூறு விளைவிக்கும் வண்ணம் சப்தமிட்டு ஸலவாத்துக் கூறக் கூடாது.

இமாம் குத்பா ஓதும் பொழுதும் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் திருப்பெயரை அவர் உச்சரிக்கும் காலையும் 'யா அய்யுஹல்லதீன ஆமனூ ஸல்லூ அலைஹி வஸல்லிமூ தஸ்லீமா' என்று கூறுங்காலையும் மனதிற்குள் ஸலவாத்துக் கூறிக் கொள்ளவேண்டும். (துர்ருல் முக்தார்)

ஹனபி மத்ஹபின்படி தொழுகையில் அத்தஹிய்யாத் ஓதும் பொழுது கடைசி இருப்பில் தவிர நடு இருப்பிலோ அல்லது வேறு நிலையிலோ ஸலவாத்து ஓதுவது மக்ரூஹ் ஆகும்.

ஸலவாத்தை அவசரம் அவசரமாக ஓதக் கூடாது. தொழுகை நேரம் அண்மி விட்டதனால் ஒருவர் தாம் வழக்கமாக ஓதி வரும் ஸலவாத்துக்களை அவசரம் அவசரமாக ஓதி முடித்தார். அன்றிரவு எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அவரின் கனவில் தோன்றி, "ஏன் அத்துணை



அவசரமாக என்மீது ஸலவாத்தை ஓதி முடித்தீர். ஓத வேண்டியவை பாக்கி இருந்தால் தொழுது விட்டு அமைதியாக இருந்து அவற்றை ஓதி முடிப்பதுதானே?" என்று திருவாய் மலர்ந்து விட்டு மறைந்தனர்.

## ஸலவாத்து ஓதுவது பற்றி ஆன்றோர்கள்

"குளிர்ந்த நீர் நெருப்பை அவிப்பது போன்று ஸலவாத்து பாவத்தை அழித்து விடும். இன்னும் அடிமைகளை விடுதலை செய்வதைவிட ஸலவாத்துக் கூறுவது சிறப்பான தாகும். ஏனெனில் அடிமைகளை விடுதலை செய்வது நரகை விட்டும் சுவனம் புகுவதற்குக் காரணமாக உள்ளது. எம்பெருமானார் (ஸல்) அவர்களின் மீது சொல்லும் ஸலவாத்தானது அல்லாஹ் அந்த ஸலவாத்தை சொன்னவன் மீது சொல்லும் ஸலவாத்துக்குக் காரணமாக உள்ளது. எனவே அடிமையை விடுதலை செய்வதைவிட ஸலவாத்துச் சொல்வது ஏற்றமானதாகும்."

- அபூ பக்கர் (ரலி) அவர்கள்

"சுன்னத் வல் ஜமாஅத்தின் அடையாளம் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓதுவதாகும்."

- இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரஹ்) அவர்கள்

"நாளொன்றுக்குக் குறைந்தது முந்நூறு ஸலவாத்துக்களேனும் ஓத வேண்டும்."

- அபூ தாலிப் மக்கீ (ரஹ்) அவர்கள்

"வணக்கங்களிலெல்லாம் மேலானது ஸலவாத்துக் கூறுவதாகும். ஏனெனில் அல்லாஹ் மற்ற வணக்கங்களையெல்லாம் நம்மைச் செய்யுமாறு கூறுகிறானேயொழியத் தானே செய்வதாகக் கூறவில்லை. ஸலவாத்தைத் தானும் கூறி வானவர்களையும் கூறச் செய்து இறை நம்பிக்கையாளர்களையும் கூறுமாறு பணிக்கின்றான்."

- ஸஹ்ல் இப்னு துஸ்தரீ (ரஹ்) அவர்கள்

"ஓர் அடியான் தான் செய்ய இயலாது போன நஃபிலான (அதிகப்படியான) தொழுகை, நோன்பு ஆகியவற்றிற்குப் பகரமாக பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்தைச் சொல்லும் வழக்கத்தை மேற்கொள்ளவும். ஏனெனில் அடி

யான் எவ்வளவுதான் நஃபிலான வணக்கங்களைச் செய்யினும் அது அவனுடைய அடிமைத்தனத்தின் அம்சம் தான்.

ஆனால் இறைவன் அவன்மீது சொல்லும் ஸலவாத்து அவனுடைய பரிசுத்தத் தன்மையின் காரணத்தால் மகத்துவம் வாய்ந்தது. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது அடியான் செய்யும் வணக்கத்தைவிட இறைவன் சொல்லும் ஸலவாத்து மேலானதாக இருக்கின்றது. ஆதலின் ஸலவாத்தை அதிகப்படுத்துங்கள்." -'தாஜுல் உரூஸ்' என்ற நூலில் தாஜுத்தீன் இப்னு அதா இல்லாஹில் இஸ்கந்தரிய்யா (ரஹ்) அவர்கள்.

"நான் பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டு, "நாயகமே! பலன்., தங்கள்மீது ஒரு தடவை ஸலவாத்துச் சொன்னவனுக்கா?" என்று வினவ, "அப்படியல்ல, என்மீது ஸலவாத்துச் சொன்னவர்கள் அனைவருக்குமாகும். அவர்களுக்கு அல்லாஹ் மலை போன்ற பெரிய வானவர்களை நன்கொடையாக அளிப்பான். அவர்கள் அனைவரும் அவனுக்காக இறைஞ்சவும் மன்னிப்புக் கோரவும் செய்வர். எனவே மன ஓர்மையுடன் ஸலவாத்துச் சொன்னவருக்கு அல்லாஹ் நல்கும் அன்பளிப்புகளை அல்லாஹ்வையன்றி வேறு எவரும் அறியமாட்டார்கள்" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்." -அஷ்ஷைகு முஹம்மத் அபுல் மவாஹிபுஷ் ஷாதலி (ரஹ்) அவர்கள்.

"பிறர் கண்டு மெச்சுவதற்காக (ரியாவுடன்) நற்செயல்கள் ஆற்றின் அவை இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எனினும் ஒருவர் அதிகமாக ஸலவாத்து ஓதி இருந்தால் அதன் பொருட்டு அவரின் அந்த நற்செயல்கள் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும்."-இமாம்கள்

"ஒருவர் ஸலவாத்தைச் சொல்வதனால் அவர் மட்டுமல்லாது அவரின் மக்களும் அதனால் பலன் பெறுகின்றனர். ஸலவாத்தை ஓதி எவருக்கு அதனை அன்பளிப்புச் செய்கின்றார்களோ அவரும் அதனால் பலன் பெறுகின்றார்."

"ஒருவர் மறுமையில் தாகத்தை விட்டும் அச்சம் தீர்வது எம்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச்



சொல்லப்படும் காரணத்தினால் தான்" -அப்துல் வஹ்ஹாப் ஷிஃரானி (ரஹ்) அவர்கள் 'லவாக்கிஹுல் அன்வார்' என்ற நூலில்.

"காய்ச்சலானது நரகத்தின் துருத்தியில் நின்றும் ஒரு துருத்தியாகும்" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். எனவே மனிதனுக்கு நரகத்தின் வெப்பத்திற்கு நிகரான காய்ச்சல் வந்தபொழுது ஸலவாத்தைத் தொடர்ச்சியாக ஓதினால் அது தாகத்தைத் தணிப்பதுடன் காய்ச்சலையும் போக்கிவிடும். இதனை நான் சோதித்துப் பார்த்ததுடன் மற்ற முஸ்லிம் சகோதரர்களுக்கும் சொல்லிக் கொடுத்தேன். அவர்கள் மக்கா செல்லுங்கால் தண்ணீர் கிடைக்காத பொழுது ஸலவாத்தை ஓதித் தாகம் தீரப்பெற்றனர்." -'தல்அத்துல் பத்ரிய்யா' என்ற நூலில் ஸையிதினா அப்துல் கனிய்யுன் நாபுலிஸி (ரஹ்) அவர்கள்

"என்னிடம் ஒரு பெண் வந்து தன் மகள் நரகத்தில் கிடந்து துன்புறுவதாகக் கனவு கண்டதாகக் கூறினாள். அவளுக்காக இறைவன் பேரில் 'ஸதகா' செய்யுமாறு நான் கூறினேன். அன்றிரவு நான் கனவில் அப்பெண்ணைச் சுவனப் பூங்காவில் ஒளி உருவாக உலவிக் கொண்டிருப்பதைக் கண்டேன். அவள் என்னிடம் வந்து 'என்னை அறிவீர்களா?' என்று வினவினாள். 'நான் அறியமாட்டேன்' என்று பதிலிறுத்தேன். அதற்கு அவள்,'இன்று உங்களிடம் ஒரு பெண் வந்து முறையிட்டாளே, அவளின் மகள்தான் நான்' என்று சொன்னாள். அது கேட்ட நான் திகைப்புற்று, 'நீ நரகில் கிடந்து உழன்று கொண்டிருப்பதாகக் கனவு கண்டதாகவல்லவோ உன் அன்னை கூறினாள்' என்று சொன்னேன்.'ஆம்! ஆனால் என்னுடைய அடக்க இடத்தின் அண்மையில் வந்த ஒருவர் அங்கு அடங்கப் பெற்றிருக்கும் அனைவருக்குமாக ஒரு ஸலவாத்து ஓதி அன்பளிப்புச் செய்தார். அதன் காரணமாக நானும் என்னைச் சேர்ந்த அனைவரும் நரகத்திலிருந்து விடுதலை பெற்றோம்' என்று கூறினாள்."

- ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள்

"இறந்துபோன என் அண்டை வீட்டுக்காரரை நான் கனவில் கண்டு அவரின் நிலை பற்றி விசாரித்தேன். அதற்கு

அவர் "முன்கர், நகீர் என்ற வானவர்கள் என்னிடம் வந்தனர். அப்பொழுது என்னால் பதில் சொல்ல இயலாது என்நா குழறியது. அதுகண்ட நான், "நான் முஸ்லிமாக இறக்கவில்லையோ?" என்று எண்ணினேன். அதற்குள் ஒரு வானவர் வந்து, அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் முறையை எனக்குக் கற்றுத் தந்தார். அப்பொழுது நான் அவரை நோக்கி, 'நீர் யார்' என்று வினவினேன். அதற்கு அவர், 'நீர் அதிகமாக ஓதிய ஸலவாத்துகளினால் படைக்கப்பட்ட வானவராவேன்' என்றார்."

- அபூ பக்கர் ஷிப்லி (ரஹ்) அவர்கள்

"ஒரு தடவை நான் கஃபாவை இடம் சுற்றி வரும் பொழுது ஒருவர் ஒவ்வோர் அடிக்கும் ஸலவாத்தைத் தவிர வேறொன்றையும் ஓதாதவராய் இடம் சுற்றி வருவதைக் கண்டு, 'அதற்கான காரணம் யாது?' என்று அவரிடம் வினவினேன். அதற்கு அவர் "நானும் என்னுடைய தந்தையும் ஹஜ்ஜு செய்ய மக்கா புறப்பட்டு வரும் பொழுது என் தந்தை வழியில் திடீரென இறப்பெய்தி விட்டார். சற்று நேரத்தில் அவருடைய முகம் பன்றியின் முகம் போலாகிக் கருத்து விட்டது. அவரின் வயிறும் வீங்கி விட்டது. அவருடைய முகத்தைத் துணியால் மூடி அளவற்ற மனவேதனையுடன் இருக்குங்கால் உறக்கம் என்னை ஆட்கொண்டது. அப்பொழுது வெண்ணாடை புனைந்த தூயவர் ஒருவர் திருத்தோற்றம் வழங்கி என் தந்தையின் முகத்தைத் தம் கையால் தடவிச் சென்றார். அது கண்ட நான் அவரின் துணியைப் பிடித்துக் கொண்டு, 'தாங்கள் யார்?' என்று வினவினேன். அதற்கு அவர்கள், "நான் திருக்குர்ஆன் அருளப் பெற்ற முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் ஆவவேன். உன் தந்தை தவறான வழியில் செல்பவராக இருந்தார். எனினும் என் மீது அதிகமதிகமாக ஸலவாத்து ஓதி வரும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். அதன் காரணமாக இக்காலை அவருக்கு அருள் புரிந்தேன்" என்று கூறி மறைந்தனர். எனவேதான் அப்பெருமானார் (ஸல்) அவர்கள் மீது நானும் அதிகமதிகமாக ஸலவாத்து ஓதி வருகிறேன்' என்று கூறினார்." -ஸுஃப்யான் அத்தௌரி (ரஹ்) அவர்கள்



"நான் என் நண்பர் ஒருவரைக் கனவில் கண்டு, "இறைவன் உம்மை என்ன செய்தான்?" என்று வினவியபொழுது, "இறைவன் என்னைத் தன் திருச்சமுகத்தில் அமரச் செய்து என் பாவங்களையும் நான் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஓதிய ஸலவாத்தையும் எண்ணிக் கணக்கிடுமாறு வானவர்களைப் பணித்தான். அவர்கள் எண்ணிக் கணக்கிட்டு பார்த்ததில் நான் செய்த பாவங்களைவிட ஓதிய ஸலவாத்துகள் அதிகமாகயிருந்ததனால் என்னை இறைவன் சுவனம் புகச் செய்தான்" என்றார் அவர்.""

- ஆன்றோர் ஒருவர்

**எந்நாவால் எம்பெருமான் புகழுரைப்பேன்? அந்நாவை எந்தனுக்கு ஈந்தருள்வாய் ஆண்டவனே!**

தஃமத்த அத்ஹறுன் நஸாரா ஃபீ நபிய்யிஹிமி
வஹ்கும் பிமா ஷிஃத்த மத்ஹன் ஃபீஹி வஹ்தகிமி

ஈஸா (அலை) அவர்களைப் பற்றிக் கிறிஸ்தவர்கள் கூறும் முறையை கடைப்பிடிக்காமல் அண்ணலெம் பெருமான் (ஸல்) அவர்களுக்கு வேறு எப்பேர்ப்பட்ட புகழையும் நீ விரும்பிய அளவுக்குக் கற்பித்து நிலைநாட்டு

ஃபன்ஸுப் இலா ஃதாத்திஹி மாஷிஃத்த மின் ஷரஃபின்
வன்ஸுப் இலாகத்ரிஹி மா ஷிஃத்த மின் இளமி

உன்னால் எவ்வளவு புகழ முடியுமோ அவ்வளவு புகழ்மொழியையும் அவர்களோடு சேர்த்து விடு! உன் விருப்பத்துக்குப் பொருந்திய அத்தனை சிறப்புகளையும் அவர்களின் பெருமையோடு இணைத்து விடு!

ஃப இன்ன பள்ல ரஸூலில்லாஹி லைஸலஹு
ஹத்துன் ஃப யுஹ்ரிப அன்ஹு நாத்திகுன் பிஃபமி

ஏனெனில் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் சிறப்புக்கு எல்லையுமில்லை. அவர்களின் மாண்பினை எடுத்துரைக்க மனிதனின் நாவுக்கு ஆற்றலுமில்லை.

- இமாம் பூஸிரி (ரஹ்

# 8. ஸலவாத்தின் வகைகள்

## ஸலவாத்துல் இப்ராஹீமிய்யா

صَلَاةُ الْاِبْرَاهِيْمِيَّة

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ سَيِّدِنَا
مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى سَيِّدِنَا اِبْرَاهِيْمَ وَعَلٰى
اٰلِ سَيِّدِنَا اِبْرَاهِيْمَ وَبَارِكْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ
وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى
سَيِّدِنَا اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ سَيِّدِنَا اِبْرَاهِيْمَ
فِى الْعَالَمِيْنَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

### மறுமையில் பெருமானாரின் பரிவுரை பெற

இந்த ஸலவாத்தை ஒருவன் ஓதிவரின் மறுமையில் அவனுக்குத் தாம் பிணை ஏற்று இறைவனிடம் அவனுக் காகப் பரிந்துரைப்பதாகப் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். (புகாரீ)

### பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் காண

இதனை ஒருவன் ஆயிரம் தடவை ஓதிவரின் அவன் பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் காணும் பேறு பெறுவான்.

ஸலவாத்துகளிலெல்லாம் இதுவே சிறந்தது என்று கூறப்படுகிறது. தங்கள் மீது எவ்விதம் ஸலவாத்து உரைப்



பது என்று தோழர்கள் வினவியபொழுது பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த ஸலவாத்தை ஓதிக் காட்டினர். ஆனால் அவர்கள் இதனை ஓதும் பொழுது இதில் அவர்களின் பெயரின் முன் 'எங்களின் நாயகமான' என்று பொருள்படும் 'ஸையிதினா' என்ற சொல் இல்லை. பின்னர் மரியாதையின் பொருட்டு அது சேர்க்கப்பட்டு அவ்வாறே இதுகாறும் ஓதப்பட்டு வருகிறது.

இந்த ஸலவாத்து மிகவும் ஆழமான பொருள் வாய்ந்த தாகும். "இறைவனே! நீ எவ்வாறு இப்ராஹீம் (அலை) அவர் கள் மீதும் அவர்களின் வழித் தோன்றல்கள் மீதும் ஸல வாத்துச் சொன்னாயோ, அவர்கள் மீது உன்னுடைய பரக்கத்தைப் பொழிந்தாயோ அவ்விதமே முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் வழித்தோன்றல்கள் மீதும் ஸலவாத்துச் சொல்வாயாக! பரக்கத்தைப் பொழிவா யாக!!" என்று இது பொருள்படும். இறைவன் இப்ராஹீம் (அலை) அவர்கள் மீது ஸலவாத்துச் சொன்னதால் அவர் களைத் தம் கலீலாக (நேசராக)த் தேர்ந்தெடுத்தது போன்று பெருமானார் (ஸல்) அவர்களைத் தம் அன்புத் தோழராக (ஹபீபாக)த் தேர்ந்தெடுத்துக் கொண்டான். மேலும் இப்ராஹீம் (அலை) அவர்களின் வழித்தோன்றல்கள் மீது 'பரக்கத்' செய்ததன் காரணமாக மூஸா (அலை) அவர்கள் தாவூத் (அலை) அவர்கள் ஈஸா (அலை) ஆகியோர் தோன்றி தௌராத், ஸபூர், இஞ்சீல் ஆகிய திருமறைகளை இறைவனிடமிருந்து பெற்று மக்களுக்குப் போதித்தனர். அரசர்க்கரசரான ஸுலைமான் (அலை) அவர்களும் எகிப்து நாட்டின் அதிபரான யூஸுஃப் (அலை) அவர்களும் இன்னும் நாற்பதாயிரம் நபிமார்களும் அவர்களின் வழி யிலேயே தோன்றினர். எல்லாவற்றிற்கும் மேலாக எம்பெரு மானார் (ஸல்) அவர்களும் இப்ராஹீம் (அலை) அவர் களின் வழியிலேயே இறுதித் தூதுவராக வந்து அல்குர் ஆனை அருளப்பெற்றனர். அதே போன்று எம்பெருமா னார் (ஸல்) அவர்களின் வழி வழி வந்த பலர் கலீபாக்களாக வும் பனீ இஸ்ராயீல்களில் தோன்றிய நபிமார்களுக்கு இணையான உலமாக்களாகவும் வலிமார்களாகவும்,

விளங்கி வந்தார்கள். விளங்கி வருகிறார்கள். இன்றும் அவர்களின் வழித் தோன்றல்கள் உலக முஸ்லிம்கள் அனைவராலும் மிகவும் மதிக்கப்பெற்றுக் கௌரவிக்கப்பட்டு வருகின்றார்கள்.

## ஸலவாத்துல் ஃபாத்திஹி

صَلَاةُ الْفَاتِحِ

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدِنِ الْفَاتِحِ
لِمَا اُغْلِقَ وَالْخَاتِمِ لِمَا سَبَقَ، وَالنَّاصِرِ الْحَقِّ
بِالْحَقِّ وَالْهَادِىْ اِلٰى صِرَاطِكَ الْمُسْتَقِيْمِ
وَصَلَّى اللّٰهُ عَلَيْهِ وَعَلٰى اٰلِهٖ وَاَصْحَابِهٖ حَقَّ
قَدْرِهٖ وَمِقْدَارِ الْعَظِيْمِ ٥

### இறைஞான இரகசியங்களை அறிய

இதனை வழக்கமாக நூறு தடவை ஓதிவரின் மறைவான இறைஞான இரகசியங்களை அறியலாம்.

### விருப்பங்கள் நிறைவேற

ஒரு விருப்பத்தை மனத்திற் கொண்டு அது நிறைவேறப் பெறுவதற்காக, இதனை வழக்கமாக ஒவ்வொரு நாளும் நூறு தடவை ஒருவன் ஓதி வருவானாயின் அவன் அதனை இறையருளால் நிறைவேற்றப் பெறுவான்.

### நரகம் ஹராமாக

இதனை ஒருவன் தன் ஆயுளில் ஒரு தடவை ஓதினும் அவன் நரகம் புகுத மாட்டான்.



### ஓரிலட்சம் ஸலவாத்துக்கு நிகர்

இதனை ஒரு தடவை ஓதுவது மற்ற ஸலவாத்துக்களை ஓரிலட்சம் தடவை ஓதுவதைவிட மேலானது எனப் பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

### பாவமன்னிப்புப் பெற

இதனை ஒருவன் நாற்பது நாட்களுக்குத் தொடர்ச்சியாக ஓதிவரின் அவனுடைய பாவங்கள் அனைத்தும் இறையருளால் மன்னிக்கப் பெறும்.

### பெருமானாரை நேரில் காண

ஒருவன் வெள்ளி அல்லது வியாழன் அல்லது திங்கள் இரவுகளில் முதல் ரகஅத்தில் ஸூரா ஃபாத்திஹாவுக்குப் பின் இன்னா அன்ஸல்னாஹு ஸூராவையும் இரண்டாம் ரகஅத்தில் இதா ஸுல்ஸிலத்துல் அர்ளு ஸூராவையும் மூன்றாம் ரகஅத்தில் குல்யா அய்யுஹல் காஃபிரூன் ஸூராவையும் நான்காம் ரகஅத்தில் குல்அவூது பிரப்பில் ஃபலக், குல் அவூது பிரப்பின்னாஸ் ஸூராக்களையும் ஓதி நான்கு ரகஅத் நஃபில் தொழுது பின்னர் நறுமணம் நிறைந்த சூழலில் இந்த ஸலவாத்தை ஆயிரம் தடவை ஓதின் அவன் பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் காணும் பேறு பெறுவான்.

## ஸலவாத்துல் முன்ஜியா

صَلَاةُ الْمُنْجِيَةِ

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّ
عَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ صَلَاةً تُنْجِيْنَا بِهَا مِنْ

جَمِيعِ الْأَهْوَالِ وَالْآفَاتِ وَتَقْضِيْ لَنَا بِهَا جَمِيعَ
الْحَاجَاتِ وَتُطَهِّرُنَا بِهَا مِنْ جَمِيعِ السَّيِّئَاتِ
وَتَرْفَعُنَا بِهَا عِنْدَكَ أَعْلَى الدَّرَجَاتِ وَتُبَلِّغُنَا
بِهَا أَقْصَى الْغَايَاتِ مِنْ جَمِيعِ الْخَيْرَاتِ فِي الْحَيَاةِ
وَبَعْدَ الْمَمَاتِ، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ يَا اَللّٰهُ ۝

**எண்ணங்கள் நிறைவேற**

இதனை ஆயிரம் தடவை ஓதின் இறையருளால் எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும்.

**துன்பம் நீங்க**

இதனைத் துன்பத்தில் சிக்கிக் கொண்டிருப்பவன், ஆயிரம் தடவை ஓதின் அவன் இறையருளால் துன்பம் நீங்கப் பெறுவான்.

ஒரு தடவை ஷைகு ஸாலிஹ் மூஸா லரீரு (ரஹ்) அவர்கள் கப்பலில் பிரயாணம் செய்தபொழுது கப்பல் கடும் புயலில் அகப்பட்டுத் தத்தளித்தது. அப்பொழுது ஒரு சிறு தூக்கம் அவர்களை ஆட்கொள்ள பெருமானார் (ஸல்) அவர்கள் ஷைகு அவர்களின் கனவில் திருத்தோற்றம் வழங்கி இந்த ஸலவாத்தைக் கற்றுக் கொடுத்து இதனை அவர்களும் கப்பலிலுள்ள ஏனையோரும் ஆயிரம் தடவை ஓதுமாறு பணித்து விட்டு மறைந்தனர். அவ்வாறே அவர்களும் ஏனையோரும் இதனை ஓதத் துவங்கி, முந்நூறு தடவை ஓதிவரும் பொழுதே புயல் அடங்கியது. அவர்கள் அனைவரும் இறையருளால் மீட்சி பெற்றார்கள்.



**காலரா, ப்ளேக் நோய் நீங்க**

மேற்கண்ட நோய்கள் பரவியுள்ள காலத்தில் இதனை ஒருவன் அதிகமாக ஓதிவரின் அவன் இறையருளால் இந் நோய்களிலிருந்து காக்கப் பெறுவான்.

**இரணம் அதிகரிக்க**

இதனை ஒருவன் வழக்கமாக ஆயிரம் தடவை ஓதிவரின் அவனின் இரணம் அதிகரித்து அவன் செல்வனாவான்.

**நாடிய நாட்டங்கள் நிறைவேற**

இதனை ஒருவன் நள்ளிரவு ஆயிரம் தடவை ஓதி இறைவனிடம் இறைஞ்சின் அவன் நாடிய நாட்டங்கள் நிறைவேறும், மின்னலின் வேகத்தில் அவனுடைய இறைஞ்சுதல் இறை சந்நிதானத்தை எய்தும் என்றும் கூறப்படுகிறது. 'இது அர்ஷின் புதையல்களில் ஒன்று' என ஷைகுல் அக்பர் இப்னு அரபி (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்

## ஸலவாத்துல் ஹிஜ்ரிய்யா

صَلَاةُ الْحِجْرِيَّةِ

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلٰى سَيِّدِنَا وَنَبِيِّنَا
وَمَوْلٰنَا مُحَمَّدٍ بَحْرِ أَنْوَارِكَ، وَمَعْدَنِ أَسْرَارِكَ
وَلِسَانِ حُجَّتِكَ وَعَرُوسِ مَمْلَكَتِكَ وَإِمَامِ
حَضْرَتِكَ وَطِرَازِ مُلْكِكَ وَخَزَائِنِ رَحْمَتِكَ
وَطَرِيقِ شَرِيْعَتِكَ الْمُتَلَذِّذِ بِمُشَاهَدَتِكَ

عَيْنِ اَعْيَانِ خَلْقِكَ الْمُتَقَدِّمِ مِنْ نُوْرِ
ضِيَائِكَ، صَلَاةً تَحُلُّ بِهَا عُقْدَتِيْ وَتُفَرِّجُ
بِهَا كُرْبَتِيْ، صَلَاةً تُرْضِيْكَ وَتُرْضِيْهِ
وَتَرْضٰى بِهَا عَنَّا يَارَبَّ الْعَالَمِيْنَ، عَدَدَمَا
اَحَاطَ بِهٖ عِلْمُكَ، وَاَحْصَاهُ كِتَابُكَ وَجَرٰى
بِهٖ قَلَمُكَ، وَعَدَدَ الْاَمْطَارِ وَالْاَحْجَارِ
وَالْاَشْجَارِ وَمَلٰٓئِكَةِ الْبِحَارِ وَجَمِيْعِ
مَا خَلَقَ مَوْلٰنَا مِنْ اَوَّلِ الزَّمَانِ اِلٰى اٰخِرِهٖ
وَالْحَمْدُ لِلّٰهِ وَحْدَهٗ

முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) அவர்கள் ஒரு வனாந்தரத்தில் நடந்து சென்றபொழுது அங்குள்ள குகை ஒன்றின் வாயலில் இந்த ஸலவாத்து பொறிக்கப் பட்டிருப்பதையும் அதன் கீழே இதனை ஒரு தடவை ஓதுவது மற்ற ஸலவாத்துக்களை ஐம்பதாயிரம் தடவை ஓதுவதைவிட மேலானது என்று பொறிக்கப்பட்டிருப் பதையும் கண்டனர். அன்றிரவு பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டு இதுபற்றி அவர்களிடம் வினவ அவர்கள், 'இதனை ஒரு தடவை ஓதுவது மற்ற ஸலவாத்துகளை எழுபதாயிரம் தடவை ஓதுவதைவிட மேலானது' என்று திருவாய் மலர்ந்தனர்.

**மறுமையில் ஒளி பெற**

ஒருவன் இதனை ஓதிவரின் மறுமையில் ஒளி பெறு வான் என்றும் எனவே இதற்கு 'ஸலவாத்துல் நூருல் கியாமா' எனப் பெயர் ஏற்பட்டது என்றும் ஸையித் அஹ்மதுஸ்ஸாவி (ரஹ்) அவர்கள் கூறுகின்றனர்.



## ஸலவாத்துஸ் ஸஆதா

## صَلَاةُ السَّعَادَةِ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ عَدَدَ مَا فِيْ
عِلْمِ اللّٰهِ صَلَاةً دَائِمَةً بِدَوَامِ مُلْكِ اللّٰهِ
(وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلِّمْ)

ஆயிஷா (ரலி) அவர்கள் நாளொன்றுக்குப் பதினா யிரம் ஸலவாத்துகளை ஓதி வரும் வழக்கமுடையவர்களா யிருந்தார்கள். அதை அறிந்த பெருமானார் (ஸல்) அவர்கள் இதனை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து இதனை ஒரு தடவை ஓதுவது மற்ற ஸலவாத்துகளை ஓரிலட்சம் தடவை ஓதுவதற்கு நிகராகும் என்று கூறினர்.

மற்ற ஸலவாத்துகளை ஓதுவதைவிட இதனை ஒரு தடவை ஓதுவது ஆறு லட்சம் தடவை மாண்புடையது என ஸையித் அஹ்மத் தஹ்லான் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார் கள்.

**இம்மை மறுமைப் பேறு பெற**

இதனை வெள்ளியன்று வழக்கமாக ஆயிரம் தடவை ஓதிவரின் இம்மையிலும் மறுமையிலும் நற்பேறு பெற லாம்.

**பாம்பு, தேள் கடியாதிருக்க**

ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் அஸ்தஃ பிருல்லாஹ் என்று நூறு தடவை ஓதி, பின்னர் இந்த ஸலவாத்தை நூறு தடவை ஓதி பின்னர் 'லாஇலாஹ இல்லல்லாஹுல் மலிக்குல் ஹக்குல் முபீன்' என்று நூறு தடவையும் பின்னர் 'முஹம்மதுர் ரஸூலுல்லாஹி

ஸாதிகுல் வஃதில் அமீன்' என்று ஒரு தடவையும் ஓதி, பின்னர் பெருமானார் சமூகத்திற்கு ஸூரத்துல் ஃபாத்திஹா ஒரு தடவை ஓதி ஹதியாச் செய்து அதே போன்று ரிஃபாயி ஆண்டகை மீதும் ரிஃபாயி தரீக்காவின் ஷைகுமார்கள் மீதும் பின்னர் எல்லாத் தரீக்காக்களின் ஷைகுமார்கள் மீதும் ஒவ்வொரு தடவை ஸூரா ஃபாத்திஹா ஓதி ஹதியாச் செய்துவரின் பாம்பு, தேள் ஆகியவை தீண்டா, தீண்டியபோதிலும் அதனால் தீங்கு ஏற்படாது.

## ஸலவாத்துல் உம்மிய்யி

صَلَاةُ الْاُمِّيِّ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ عَبْدِكَ

وَنَبِيِّكَ وَرَسُوْلِكَ النَّبِيِّ الْاُمِّيِّ

(وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلِّمْ)

"இதனை ஒருவன் வெள்ளியன்று எண்பது தடவை ஓதின் அவனுடைய எண்பது ஆண்டுப் பாவங்களை இறைவன் பொறுத்தருள்வான்" என்று ஸஹ்லு இப்னு அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

### இறைவனைத் தரிசிக்க

"ஒருவன் வெள்ளியன்று பகலில் இந்த ஸலவாத்தை ஆயிரம் தடவை ஓதின் அந்த இரவிலேயே அவன் இறைவனைத் தரிசிக்கும் பேறு பெறுவான். இல்லையெனில் அவன் பெருமானார் (ஸல்) அவர்களைக் காண்பான் அல்லது சுவனத்தில் அவனுக்குரிய இடத்தை காண்பான். அவ்விதம் காணாவிடின் ஜும்ஆ, மூன்றாம் ஜும்ஆ, நான்காம் ஜும்ஆ, ஐந்தாம் ஜும்ஆ வரை ஓதி வர வேண்டும். நிச்சயம் கண்டு கொள்வான்" எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதாக 'புஸ்தானுல் புகராயிய்யா' என்ற



நூலில் இமாம் யாஃபி (ரஹ்) அவர்கள் வாயிலாக அறிவிக்கப்படுகிறது.

### பெருமானார் (ஸல்) அவர்களை விழிப்பு நிலையில் காண

"ஒருவன் இதனை நாள்தோறும் ஐந்நூறு தடவை வழக்கமாக ஓதிவரின் அவன் பெருமானார் (ஸல்) அவர்களை விழிப்பு நிலையில் காணப் பெறாது இறப்பெய்த மாட்டான்" என முர்ஸிய்யி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்.

### பெருமானார் (ஸல்) அவர்களைக் காண

"ஒருவன் வெள்ளி இரவில் ஒவ்வொரு ரகஅத்திலும் ஸூரா ஃபாத்திஹா ஒரு தடவையும் ஆயத்துல் குர்ஸி பதினைந்து தடவையும் ஓதி இரண்டு ரகஅத் நஃபில் தொழுத பின் ஆயிரம் தடவை இந்த ஸலவாத்தை ஓதுவானாயின் அவன் என்னைத் திட்டமாகக் கனவில் கண்டு கொள்வான்- மறு ஜும்ஆ வருவதற்குள் எவனொருவன் என்னைக் கனவில் கண்டானோ அவனுக்குச் சுவர்க்கம் நிச்சயமாகி விட்டது" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றனர். இச்செய்தி முஹ்யித்தீன் ஆண்டகை எழுதிய 'குன்யத்துத் தாலிபீன்' என்ற நூலிலும் 'அஃபஸலுஸ் ஸலவாத்' என்ற நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த ஸலவாத்தைத் தாம் தம் தந்தையின் ஆணைப்படி ஓதி வந்ததாகவும் ஓரிரவு பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டு இதனை ஓதிக் காட்டியபொழுது அவர்கள் பெரிதும் மகிழ்ந்ததாகவும் ஷா வலியுல்லாஹ் தம் 'ஹிருஸ் ஸமீன்' என்ற நூலில் எழுதியுள்ளனர்

### ஸையிது அபுல் ஹஸன் ஷாதலி (ரஹ்) அவர்கள் வழக்கமாக ஓதி வந்த

### ஸலவாத்துன் நூரி தாத்தி

## صَلَاةُ النُّوْرِ الذَّاتِي

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلٰى سَيِّدِنَا
مُحَمَّدِنِ النُّوْرِ الذَّاتِي، وَسِرِّ السَّارِي فِي
سَائِرِ الْاَسْمَاءِ وَالصِّفَاتِ، وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلِّمْ

**ஓரிலட்சம் ஸலவாத்துகளுக்கு நிகர்**

இதனை ஒரு தடவை ஓதுவது மற்ற ஸலவாத்துகளை ஓரிலட்சம் தடவை ஓதுவதற்கு நிகராகும்.

**துன்பம், பீடை அகல**

இதனை ஒருவன் தினந்தோறும் ஐந்நூறு தடவை ஓதிவரின் அவனுடைய துன்பங்களும் அவனைப் பீடித்த பீடைகளும் அவனை விட்டகலும்.

**கண் ஒளி, இதய ஒளி எய்தப் பெற**

இதனை வழக்கமாக ஓதி வருபவர்கள் கண் ஒளி, இதய ஒளி ஆகியவை எய்தப் பெறுவர். இதனைச் சிறு வயது முதல் வழக்கமாக ஓதி வருபவர்களுக்குக் கண் ஒளி மங்காது. இது சோதிக்கப்பட்ட ஒன்றாகும்.

**ஸையிது அஹமதுல் கபீர் ரிஃபாயீ (ரஹ)**
**அவர்கள் வழக்கமாக ஓதி வந்த**

**ஸலவாத்துல் ஜௌஹரத்தில் அஸ்ரார்**



## صَلَاةُ جَوْهَرَةِ الْاَسْرَارِ

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلٰى نُوْرِكَ الْاَسْبَقِ
وَصِرَاطِكَ الْمُحَقَّقِ، الَّذِيْ اَبْرَزْتَهٗ رَحْمَةً شَامِلَةً
لِوُجُوْدِكَ، وَاَكْرَمْتَهٗ بِشُهُوْدِكَ، وَاصْطَفَيْتَهٗ
لِنُبُوَّتِكَ، وَرِسَالَتِكَ. وَاَرْسَلْتَهٗ بَشِيْرًا وَّنَذِيْرًا
وَدَاعِيًا اِلَى اللّٰهِ بِاِذْنِهٖ وَسِرَاجًا مُّنِيْرًا، نُقْطَةِ مَرْكَزِ
الْبَاءِ الدَّائِرَةِ الْاَوَّلِيَّةِ، وَسِرِّ اَسْرَارِ الْاَلِفِ الْقُطْبَانِيَّةِ
الَّذِيْ فَتَقْتَ بِهٖ رَتْقَ الْوُجُوْدِ، وَخَصَّصْتَهٗ
بِاَشْرَفِ الْمَقَامَاتِ بِمَوَاهِبِ الْاِمْتِنَانِ وَالْمَقَامِ
الْمَحْمُوْدِ، وَاَقْسَمْتَ بِحَيَاتِهٖ فِيْ كِتَابِكَ
الْمَشْهُوْدِ، لِاَهْلِ الْكَشْفِ وَالشُّهُوْدِ، فَهُوَ
سِرُّكَ الْقَدِيْمُ السَّارِيْ، وَمَاءُ جَوْهَرِ الْجَوْهَرِيَّةِ
الْجَارِيْ، الَّذِيْ اَحْيَيْتَ بِهِ الْمَوْجُوْدَاتِ مِنْ مَعْدَنٍ
وَحَيَوَانٍ وَنَبَاتٍ، قَلْبِ الْقُلُوْبِ وَرُوْحِ الْاَرْوَاحِ،
وَاَعْلَامِ الْكَلِمَاتِ الطَّيِّبَاتِ، اَلْقَلَمِ الْاَعْلٰى، وَالْعَرْشِ

الْمُحِيْطِ، رُوْحِ جَسَدِ الْكَوْنَيْنِ، وَبَرْزَخِ
الْبَحْرَيْنِ، وَثَانِي اثْنَيْنِ، وَفَخْرِ الْكَوْنَيْنِ، اَبِي
الْقَاسِمِ اَبِي الطَّيِّبِ سَيِّدِنَا مُحَمَّدِ بْنِ عَبْدِ اللهِ
بْنِ عَبْدِ الْمُطَّلِبِ، عَبْدِكَ وَنَبِيِّكَ وَحَبِيْبِكَ
وَرَسُوْلِكَ النَّبِيِّ الْاُمِّيِّ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلِّمْ
تَسْلِيْمًا كَثِيْرًا بِقَدْرِ عَظْمَةِ ذَاتِكَ فِيْ كُلِّ
وَقْتٍ وَحِيْنٍ، سُبْحَانَ رَبِّكَ رَبِّ الْعِزَّةِ عَمَّا يَصِفُوْنَ
وَسَلَامٌ عَلَى الْمُرْسَلِيْنَ، وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ

**இறைஞான இரகசியங்களை அறிய**

இதனை ஒருவன் காலையில் மூன்று தடவையும் மாலையில் மூன்று தடவையும் வழக்கமாக ஓதிவரின் அவன் இறைஞான இரகசியங்களை அறிவான்.

**நோய், பீடை, துன்பம் விஷக்கடி நீங்க**

முதலில் ஸூரத்து ஃபாத்திஹா ஓதி, பின்னர் இந்த ஸலவாத்தை ஓதி அவற்றை ஸையித் அஹ்மத் கபீர் ரிஃபாயி (ரஹ்) அவர்களின் சமூகத்திற்கு ஹதியா செய்து அவர்களைக் கொண்டு வஸீலா தேட இறையருளால் மேற் கண்ட அத்தனை துன்பங்களும் அவனை விட்டு நீங்கி அவன் நிவாரணம் பெறுவான்.

## ஸையிது அஹ்மது பதவீ (ரஹ்) அவர்கள் வழக்கமாக ஓதி வந்த

**ஸலவாத்துன் நூரானிய்யா**



## صَلَاةُ النُّوْرَانِيَّةِ

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلٰى سَيِّدِنَا وَمَوْلٰنَا
مُحَمَّدٍ شَجَرَةِ الْاَصْلِ النُّوْرَانِيَّةِ، وَلَمْعَةِ الْقَبْضَةِ
الرَّحْمَانِيَّةِ وَاَفْضَلِ الْخَلِيْقَةِ الْاِنْسَانِيَّةِ، وَاَشْرَفِ
الصُّوَرِ الْجِسْمَانِيَّةِ وَمَعْدَنِ الْاَسْرَارِ الرَّبَّانِيَّةِ
وَخَزَائِنِ الْعُلُوْمِ الْاِصْطِفَائِيَّةِ، صَاحِبِ الْقَبْضَةِ
الْاَصْلِيَّةِ، وَالْبَهْجَةِ السَّنِيَّاتِ، وَالرُّتْبَةِ الْعَلِيَّةِ
مَنِ انْدَرَجَتِ النَّبِيُّوْنَ تَحْتَ لِوَائِهٖ فَهُمْ مِنْهُ
وَاِلَيْهِ، وَصَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ وَعَلٰى اٰلِهٖ
وَصَحْبِهٖ عَدَدَ مَا خَلَقْتَ وَرَزَقْتَ وَاَمَتَّ وَاَحْيَيْتَ
اِلٰى يَوْمِ تَبْعَثُ مَنْ اَفْنَيْتَ وَسَلِّمْ تَسْلِيْمًا
كَثِيْرًا وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ○

இதனை ஒவ்வொரு தொழுகைக்குப் பின்பும் ஏழு தடவை ஓதி வருவது நன்மையாகும். இதனை மூன்று தடவை ஓதுவது 'தலாயிலுல் கைராத்' என்ற ஸலவாத்து நூல் முழுவதையும ஒரு தடவை ஓதுவதற்குச் சமம்.

**இறைஞான ஒளிபெற, இறைவழிப் பாதையின் இரகசியம் வெளியாக**

இதனை வழக்கமாக ஓத வேண்டும்.

### விழிப்பு நிலையிலும் கனவிலும் பெருமானார் (ஸல்) அவர்களைக் காண

இதனை வழக்கமாக ஓதிவருபவர் பெருமானார் (ஸல்) அவர்களை விழிப்பு நிலையிலும் கனவிலும் காணப் பெறும் பேறு பெறுவார்.

### குத்புகளின் பதவியை எய்தப் பெற

இதனை வழக்கமாக ஓதிவரும் வலிமார்கள் குத்புகளின் படித்தரத்தை எய்தப் பெறுவர்.

### தேவைகள் நிறைவேற

இதனை வழக்கமாக ஓதி வருபவர்களின் வெளிப்படையான, மறைவான தேவைகள் இறையருளால் நிறைவேறும்.

### ஷைத்தானை, பகைவர்களை வெற்றி கொள்ள

இதனை ஒருவன் வழக்கமாக ஓதிவரின் அவன் ஷைத்தானுடைய தீமைகளை விட்டும் காக்கப் பெறுவான். அவனின் பகைவர்கள் அடங்கி விடுவர்.

இதன் முழுப் பலனையும் பெற விரும்புவோர் 'உளூ' வுடன் அமர்ந்து பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அன்பும் பக்தியும் கொண்டு ஓத வேண்டும்.

### மகத்தான நற்பலன்களைப் பெற

ஒருவன் இதனை மேலே கூறப்பட்ட பேணுதலுடன் நாளொன்றுக்கு நூறு தடவை வீதம் நாற்பது நாட்களுக்குத் தொடர்ந்து ஓதிவரின் அவனுக்குச் சித்தியாகும் சிறப்பின் மகிமையை அல்லாஹ் ஒருவனையன்றி வேறு எவராலும் மதிப்பிட இயலாது.

### இறைஞான இரகசியங்களை அறிய

இதனை ஒருவன் சுப்ஹு தொழுகைக்குப் பின் மூன்று தடவையும் மஃரிபுத் தொழுகைக்குப் பின் மூன்று தடவையும் வழக்கமாக ஓதிவரின் அவன் இறைஞான இரகசியங்களை அறிவான்.



இது ஸையித் அஹ்மதுல் பதவீ (ரஹ்) அவர்கள் இறந்ததன் பின்னர் அவர்கள் தம் கப்ரில் வைத்துப் பெருமானார் (ஸல்) அவர்கள் மூலமாக இதனைப் பெற்றுத் தம் ஆன்மீக மாணவரான ஸையித் முஜாஹித் (ரஹ்) அவர்களுக்கு கப்ரில் நின்றும் வெளிப்படுத்தியது என்றும் கூறுவர்.

## ஆயிரம் ஸலவாத்துகளுக்கு நிகரான

### ஸலவாத்துல் ஹஸாரி

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ مَادَامَتِ الصَّلٰوةُ وَصَلِّ
عَلٰى مُحَمَّدٍ مَّادَامَتِ الرَّحْمَةُ وَصَلِّ عَلٰى مُحَمَّدٍ مَّادَامَتِ
الْبَرَكَاتُ وَصَلِّ عَلٰى رُوْحِ مُحَمَّدٍ فِى الْاَرْوَاحِ وَ
صَلِّ عَلٰى رُوْحِ مُحَمَّدٍ فِى الصُّوَرِ وَصَلِّ عَلٰى اِسْمِ
مُحَمَّدٍ فِى الْاَسْمَآءِ وَصَلِّ عَلٰى نَفْسِ مُحَمَّدٍ فِى النُّفُوْسِ
وَصَلِّ عَلٰى قَلْبِ مُحَمَّدٍ فِى الْقُلُوْبِ وَصَلِّ عَلٰى قَبْرِ
مُحَمَّدٍ فِى الْقُبُوْرِ وَصَلِّ عَلٰى رَوْضَةِ مُحَمَّدٍ فِى
الرِّيَاضِ وَصَلِّ عَلٰى جَسَدِ مُحَمَّدٍ فِى الْاَجْسَادِ
وَصَلِّ عَلٰى تُرْبَةِ مُحَمَّدٍ فِى التُّرَابِ وَصَلَّى اللّٰهُ
عَلٰى خَيْرِ خَلْقِهٖ سَيِّدِنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَاَصْحَابِهٖ

وَاَزْوَاجِهٖ وَذُرِّيَّاتِهٖ وَاَهْلِ بَيْتِهٖ وَاَحْبَابِهٖ -
اَجْمَعِيْنَ بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ ٥

**உளத் தெளிவு பெற**

இதனை நாள்தோறும் வழக்கமாக ஓதிவரும் ஒருவன் உளத் தெளிவை எய்தப் பெறுவான்.

**கப்ரின் வேதனையிலிருந்து மீட்சி அளிக்க**

ஒருவரின் அடக்க இடத்தின் அண்மையில் அமர்ந்து இதனை மூன்று தடவை ஓதி அவருக்கு ஹதியாச் செய்யின் எண்பதாண்டுகள் அவர் கப்ரின் வேதனையை விட்டும் மீட்சி பெறுவார்.

**பாவம் அனைத்தும் பொறுக்கப் பெற**

ஒருவரின் அடக்க இடத்தின் அண்மையில் அமர்ந்து இதனை நான்கு தடவை ஓதி அவருக்கு ஹதியாச் செய்யின் அவர் பவம் அனைத்தும் பொறுக்கப் பெற்று மறுமை நாள் வரை கப்ரின் வேதனையிலிருந்து மீட்சி அளிக்கப் பெறுவார்.

**இறந்த தாய் தந்தையருக்குக் கடனாற்ற**

இதனை ஒருவன் இருபத்து நான்கு தடவை ஓதித் தன் தாய் தந்தையருக்கு ஹதியாச் செய்யின் அவன் அவர்களுக்குத் தன் கடமையை ஆற்றியவனாவான். இதன் காரணமாக அவனின் தாய், தந்தையர் பவம் பொறுக்கப்பட்டு ஈடில்லாப் பெரும் பதவியை எய்தப் பெறுவர். அவர்கள் ஆயிரம் வானவர்கள் தம்மை வந்து தரிசித்துச் செல்லும் பேற்றினைப் பெறுவார்கள்.

**'தலாயிலுல் கைராத்' என்ற ஸலவாத்து நூல் எழுதப் பெற மூல காரணமாக இருந்த ஸலவாத்து**



اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا
مُحَمَّدٍ صَلَاةً دَائِمَةً مَقْبُوْلَةً تُعَدِّىْ بِهَا
اَنَّهُ الْحَقُّ الْعَلِيْمُ ٥

ஸுலைமானுல் ஜஸூலிய்யி (ரஹ்) அவர்கள் ஒரு காட்டில் செல்லும்பொழுது 'உளூ'ச் செய்யத் தண்ணீர் கிடைக்காது ஒரு கிணற்றை அடைந்த பொழுது அதில் தண்ணீர் எடுக்க வாளி இல்லாததைக் கண்டு யாது செய்வதென அறியாது திகைத்து நின்றனர். அப்பொழுது ஆங்கு வந்த இளம் பெண் ஒருத்தி தாங்கள் யார் என்று வினவ அவர்கள் தம் பெயரைக் கூறினர். அது கேட்ட அவள், "பெரிய அறிஞரெனக் கூறப்படும் தங்களுக்குக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ள வகை தெரியவில்லையே" என்று கூறிக் கிணற்றில் எச்சில் உமிழ, தண்ணீர் பொங்கித் தரையில் வழிந்தோடியது. அவர்கள் அதில் 'உளூ' ச் செய்து பின்னர் அவளை நோக்கி, "நீ இத்தகு மாண்பினை எவ்வாறு பெற்றாய்?" என்று வியப்புடன் வினவிய பொழுது "பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஓதிவரும் ஸலவாத்தைக் கொண்டு" என்று பதில் கூறினாள். "அது என்ன ஸலவாத்து?" என்று ஆவலுடன் கேட்ட பொழுது மேலே கூறப்பட்ட ஸலவாத்தை ஓதிக் காட்டினாள். அக்கணமே ஸலவாத்தின் மகிமைப் பற்றி ஒரு நூல் எழுத அவர்கள் உறுதி கொண்டு, "தலாயிலுல் கைராத்" என்ற ஸலவாத்து நூலை எழுதலாயினர். இந்நூலை எழுதியதன் காரணமாக அவர்களின் அடக்க இடத்தில் கஸ்தூரி மணம் கமழ்ந்து கொண்டிருப்பதாக ஷைகு ஜரூக்கு (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

**இமாம் ஷாஃபியீ (ரஹ்) வெள்ளி இரவுகளில் ஓதி வந்த ஸலவாத்து ஹம்ஸா**

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ بِعَدَدِ مَنْ صَلّٰى عَلَيْهِ
وَصَلِّ عَلٰى مُحَمَّدٍ بِعَدَدِ مَنْ لَّمْ يُصَلِّ عَلَيْهِ
وَصَلِّ عَلٰى مُحَمَّدٍ كَمَا اَمَرْتَ بِالصَّلٰوةِ عَلَيْهِ
وَصَلِّ عَلٰى مُحَمَّدٍ كَمَا تُحِبُّ اَنْ يُصَلّٰى عَلَيْهِ
وَصَلِّ عَلٰى مُحَمَّدٍ كَمَا يَنْبَغِيْ اَنْ تُصَلّٰى عَلَيْهِ

இமாம் ஷாஃபியீ (ரஹ்) அவர்களை ஒருவர் கனவிற் கண்டு, "அல்லாஹ் தங்களுடன் எவ்வாறு நடந்து கொண்டான்?" என்று வினவியபொழுது, "என் பவம் பொறுத்தருளி என்னை ஆட்கொண்டான்" என்று அவர்கள் பதிலுறுத்தனர். "எதன் பொருட்டு?" என்று மேற்கொண்டும் வினவிய பொழுது, "நான் வெள்ளி இரவுகளில் ஓதி வந்த ஐந்து ஸலவாத்துகளின் பொருட்டால்" என்று கூறி மேற் கண்ட ஸலவாத்துகளை இயம்பினர்.

## தாஜுஸ் ஸலவாத்து அல்லது தருத் தாஜ்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا وَمَوْلَانَا مُحَمَّدٍ صَاحِبِ
التَّاجِ وَالْمِعْرَاجِ وَالْبُرَاقِ وَالْعَلَمِ ○ دَافِعِ الْبَلَاۤءِ
وَالْوَبَاۤءِ وَالْقَحْطِ وَالْمَرَضِ وَالْاَلَمِ ○ اِسْمُهٗ مَكْتُوْبٌ
مَرْفُوْعٌ مَّشْفُوْعٌ مَّنْقُوْشٌ فِى اللَّوْحِ وَالْقَلَمِ ○



سَيِّدِ الْعَرَبِ وَالْعَجَمِ ○ جِسْمُهٗ مُقَدَّسٌ
مُعَطَّرٌ مُّطَهَّرٌ مُّنَوَّرٌ فِى الْبَيْتِ وَالْحَرَمِ ○
شَمْسِ الضُّحٰى بَدْرِ الدُّجٰى صَدْرِ الْعُلٰى
نُوْرِ الْهُدٰى كَهْفِ الْوَرٰى مِصْبَاحِ الظُّلَمِ ○
جَمِيْلِ الشِّيَمِ ○ شَفِيْعِ الْاُمَمِ ○ صَاحِبِ
الْجُوْدِ وَالْكَرَمِ ○ وَاللّٰهُ عَاصِمُهٗ وَجِبْرِيْلُ
خَادِمُهٗ ○ وَالْبُرَاقُ مَرْكَبُهٗ ○ وَالْمِعْرَاجُ سَفَرُهٗ ○
وَسِدْرَةُ الْمُنْتَهٰى مَقَامُهٗ ○ وَقَابَ قَوْسَيْنِ
مَطْلُوْبُهٗ ○ وَالْمَطْلُوْبُ مَقْصُوْدُهٗ ○ وَالْمَقْصُوْدُ
مَوْجُوْدُهٗ ○ سَيِّدِ الْمُرْسَلِيْنَ ○ خَاتَمِ النَّبِيِّيْنَ ○
شَفِيْعِ الْمُذْنِبِيْنَ ○ اَنِيْسِ الْغَرِيْبِيْنَ ○ رَحْمَةٍ
لِّلْعٰلَمِيْنَ ○ رَاحَةِ الْعَاشِقِيْنَ ○ مُرَادِ الْمُشْتَاقِيْنَ
شَمْسِ الْعَارِفِيْنَ ○ سِرَاجِ السَّالِكِيْنَ ○ مِصْبَاحِ
الْمُقَرَّبِيْنَ ○ مُحِبِّ الْفُقَرَاۤءِ وَالْمَسَاكِيْنِ ○ سَيِّدِ
الْمُتَّقِيْنَ ○ نَبِيِّ الْحَرَمَيْنِ اِمَامِ الْقِبْلَتَيْنِ ○ وَسِيْلَتِنَا

فِي الدَّارَيْنِ ۝ صَاحِبِ قَابَ قَوْسَيْنِ ۝ مَحْبُوْبِ رَبِّ
الْمَشْرِقَيْنِ وَالْمَغْرِبَيْنِ ۝ جَدِّ الْحَسَنِ وَالْحُسَيْنِ ۝
مَوْلٰنَا وَمَوْلَى الثَّقَلَيْنِ ۝ أَبِي الْقَاسِمِ مُحَمَّدِ بْنِ عَبْدِ اللّٰهِ
نُوْرًا مِّنْ نُوْرِ اللّٰهِ ۝ يَآ أَيُّهَا الْمُشْتَاقُوْنَ بِنُوْرِ جَمَالِهِ
صَلُّوْا عَلَيْهِ وَاٰلِهِ وَأَصْحَابِهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا ۝

இது அதன் பெயருக்கேற்ப ஸலவாத்துகளின் மணி மகுடம் போன்றுள்ளது. இதனுடைய மாண்பு அளப்பரியதாகும். தம் பெயரை வெளியே காட்ட விரும்பாத மேதை ஒருவரால் இது இயற்றப் பெற்றது என்று கூறப்படுகிறது.

### குழந்தை பெற

இருபத்தியொரு பேரீத்தம் பழங்களை ஒன்றாக வைத்து அவற்றின் மீது ஏழு தடவை இதனை ஓதி நாளொன்றுக்கு ஒன்று வீதம் இருபத்தியொரு நாட்கள் அந்தப் பேரீத்தம் பழங்களை ஒரு பெண் உண்டு அதன்பின் தன் கணவனுடன் மருவின் இறைவனருளால் கருவுறுவாள். அதன்பின் கருவில் ஏதேனும் கோளாறு ஏற்படின் தொடர்ந்து ஏழு நாட்களுக்கு இதனைத் தண்ணீரில் ஓதி ஊதிக்குடித்துவரின் கரு காக்கப் பெற்று குழந்தை பிறக்கும்.

### குறிக்கோள் எய்தப் பெற

நள்ளிரவில் விழித்தெழுந்து 'உளு'வுடன் நாற்பது தடவை இதனை ஓதின் எண்ணிய குறிக்கோளை இறையருளால் எய்தப் பெறலாம்.

### வறுமை நீங்க

இதனை ஒருவன் இஷா தொழுதபின் நாற்பத்து ஒரு தடவை வீதம் நாற்பது நாட்கள் ஓதிவரின் அவனைப் பிடித்த வறுமை தொலையும்.



### இரணம் அதிகரிக்க

இதனை ஒருவன் வைகறைத் தொழுகைக்குப் பின் வழக்கமாக ஒரு தடவை ஓதிவரின் அவனுடைய இரணம் அதிகப்படும்.

### மனத் தெளிவு எய்தப் பெற

இதனை ஒருவன் வைகறைத் தொழுகைக்குப் பின் ஏழு தடவையும் அஸர் தொழுகை, இஷாத் தொழுகை ஆகியவற்றிற்குப் பின் மும்மூன்று தடவையும் வழக்கமாக ஓதிவரின் அவனுடைய மனம் இருள் நீங்கப் பெற்று ஒளி பெறும்.

### வஞ்சனை, பேய், தோத்து நோய் நீங்க

வஞ்சனை வைக்கப்பட்டவர்களுக்கும் பேய் பிடித்தவர்களுக்கும் தொத்து நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் இதனைப் பதினொரு தடவை தண்ணீரில் ஓதி ஊதிக் கொடுப்பின் நலன் ஏற்படும்.

### பிறரின் பகைமை, பொறாமை, துன்பம் ஆகியவற்றிலிருந்து விடுதலை பெற

இதனை ஒருவன் தொடர்ந்து ஓதிவரின் அவன் பிறரின் பகைமை, பொறாமை, தொல்லை, துன்பம் ஆகியவற்றிலிருந்து விடுதலை எய்தப் பெறுவான்.

### பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் காண

ஒருவன் பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் காணவிரும்பின் வளர்பிறையில் வரும் ஒரு வெள்ளி இரவில் தூய்மையான உடையணிந்து நறுமணம் பூசி இஷாத் தொழுகை முடித்து உளுவுடன் நூற்று எழுபது தடவை இந்த ஸலவாத்தை ஓதி விட்டு உறங்கவும். இவ்வாறு தொடர்ந்து மொத்தம் பதினொரு இரவுகள் செய்துவரின் இவ்விரவுகளில் எதிலாவது அவன் பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் காணும் பேறு பெறுவான்.

## ஸலவாத்துஸ் ஸதகா

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ عَبْدِكَ وَرَسُوْلِكَ وَصَلِّ
عَلَى الْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ
وَالْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ

**ஸதக்கா கொடுத்த பலனைப் பெற**

"எவர் ஒருவருக்கு ஸதக்கா கொடுக்க வசதி இல்லையோ அவர் இந்த ஸலவாத்தை ஓதி வரவும். இது அவர் செய்யக் கூடிய ஸதக்காவாக ஆகிவிடும்" என்று எம்பெருமானார் (ஸல்) அவர்கள் அருள்மொழி பகர்ந்துள்ளார்கள். எனவே இந்த ஸலவாத்தை ஸதக்கா கொடுக்க வசதியில்லாதவர்களுக்கு அருளப்பட்ட ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம்.

**சொத்து, சுகங்கள் அதிகப்பட**

ஒருவன் இந்த ஸலவாத்தை அதிகமதிகமாக ஓதிவரின் அவனுக்கு சொத்து, சுகங்கள் அதிகமாகும்.

## ஸலவாத்துர் ரூஹ்

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى رُوْحِ سَيِّدِنَا مُحَمَّدٍ فِي الْاَرْوَاحِ
وَصَلِّ وَسَلِّمْ عَلٰى قَلْبِ سَيِّدِنَا مُحَمَّدٍ فِي الْقُلُوْبِ
وَصَلِّ وَسَلِّمْ عَلٰى جَسَدِ سَيِّدِنَا مُحَمَّدٍ فِي الْاَجْسَادِ
وَصَلِّ وَسَلِّمْ عَلٰى قَبْرِ سَيِّدِنَا مُحَمَّدٍ فِي الْقُبُوْرِ ۔



**நோய் நீங்கப் பெற**

அல்லாஹ்வின் நல்லடியார் ஒருவர் நீரடைப்பால் நலிவுற்றபொழுது ஷிஹாபுத்தீன் இப்னு ரஸ்லான் (ரஹ்) அவர்கள் அவரின் கனவில் திருத்தோற்றம் வழங்கினர். அப்பொழுது அவர் அவர்களிடம் தம் நோய் பற்றிக் கூறிய பொழுது, "அவ்விதமாயின் நீர் ஏன் அதற்கான அருமருந்தொன்றைப் பயன்படுத்தி நலன் பெறக் கூடாது?" என்று வினவினர். "என்ன அந்த அருமருந்து?" என்று அவர் ஆவலுடன் வினவிய பொழுது மேலே கண்ட ஸலவாத்தை அவர்கள் அவருக்கு எடுத்தோதினர். திடுக்குற்று விழித்தெழுந்த அவர் அந்த ஸலவாத்தைத் தொடர்ந்து ஓதி வர அவர் விரைவில் நலன் பெற்றார்.

**பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் காண**

"இதனை ஓதுபவர் என்னைக் கனவில் காண்பார்" என்று பெருமானார் (ஸல்) அவர்களே திருவாய் மலர்ந்துள்ளனர்.

பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் காண்பது சாமான்யப்பட்ட பேறல்ல. பெறுதற்கரிய பேறாகும். "என்னைக் கனவில் கண்டவர் மறுமையில் என்னைக் காண்பார். அப்பொழுது நான் அவருக்காக இறைவனிடம் பரிந்துரைப்பேன். என் பரிவுரை பெற்றவர் ஹெளலுல் கெளதரில் நீர் அருந்துவார். அல்லாஹ் அவருடைய உடலை நரக நெருப்பிலிருந்து காத்தருள் புரிவான்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர்.

ஷைத்தானுக்குப் பெருமானார் (ஸல்) அவர்களின் உருவில் வர முடியாததால் பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டவர் உண்மையில் அவர்களைக் கனவில் கண்டவரேயாவார். அவர்களை வேறு ஒருவரின் உருவத்தில் கண்ட போதினும் அவர்களைக் கண்டதேயாகும். கண்டவரின் தகுதிக்குத் தக்க வண்ணம் அவர்கள் தோற்றம் வழங்கினர் என்றே அதற்குப் பொருள் கொள்ள வேண்டும். மார்க்கத்திற்கு முரணான செயலைச் செய்யுமாறு அவர்கள் பணிப்பின் அதனைச் செய்யாதிருக்குமாறு அவர்கள் அருள் எச்சரிக்கை செய்ததாக விளக்கம் பகர வேண்டும் என்று கனவு நூல் வல்லார்கள் கூறுகின்றனர்.

## ஸலவாத்து லக்கி

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ٥

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا وَمَوْلَانَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ
سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ رَحْمَةِ اللّٰهِ  اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى
سَيِّدِنَا وَمَوْلَانَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ فَضْلِ
اللّٰهِ ٥ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا وَمَوْلَانَا مُحَمَّدٍ وَّعَلٰى
اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ خَلْقِ اللّٰهِ ٥ اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا
وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ عِلْمِ اللّٰهِ ٥
اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ
سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ كَلِمَاتِ اللّٰهِ ٥ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ
عَلٰى سَيِّدِنَا وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ
كَرَمِ اللّٰهِ ٥ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا وَمَوْلٰنَا مُحَمَّدٍ
وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ حُرُوْفِ كَلَامِ اللّٰهِ ٥ اَللّٰهُمَّ
صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا
مُحَمَّدٍ بِعَدَدِ قَطَرَاتِ الْاَمْطَارِ ٥ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا
وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ اَوْرَاقِ الْاَشْجَارِ
اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ



سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ رَمْلِ الْقِفَارِ ٥ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ
عَلٰى سَيِّدِنَا وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ
مَا خُلِقَ فِي الْبِحَارِ ٥ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا وَمَوْلٰنَا
مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ الْحُبُوْبِ وَالثِّمَارِ ٥
اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ
سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ اللَّيْلِ وَالنَّهَارِ ٥ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ
عَلٰى سَيِّدِنَا وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ
مَا اَظْلَمَ عَلَيْهِ اللَّيْلُ وَاَشْرَقَ عَلَيْهِ النَّهَارُ ٥ اَللّٰهُمَّ صَلِّ
وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ
بِعَدَدِ مَنْ صَلّٰى عَلَيْهِ ٥ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا
وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ مَنْ لَّمْ يُصَلِّ
عَلَيْهِ ٥ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى
اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ اَنْفَاسِ الْخَلَائِقِ ٥ اَللّٰهُمَّ صَلِّ
وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ
بِعَدَدِ نُجُوْمِ السَّمٰوٰتِ ٥ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا
وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ بِعَدَدِ كُلِّ شَيْءٍ
فِي الدُّنْيَا وَالْاٰخِرَةِ صَلَوٰتُ اللّٰهِ تَعَالٰى وَمَلٰٓئِكَتِهٖ  وَ

الْاَنْبِيَاءِ وَرُسُلِهٖ وَجَمِيْعِ الْخَلَائِقِ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ ٥
وَاِمَامِ الْمُتَّقِيْنَ ٥ وَقَائِدِ الْغُرِّ الْمُحَجَّلِيْنَ ٥ وَشَفِيْعِ
الْمُذْنِبِيْنَ ٥ سَيِّدِنَا وَمَوْلٰنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ وَاَصْحَابِهٖ
وَاَزْوَاجِهٖ وَذُرِّيَّاتِهٖ وَاَهْلِ بَيْتِهٖ وَاَهْلِ طَاعَتِكَ
اَجْمَعِيْنَ ٥ مِنْ اَهْلِ السَّمٰوٰتِ وَالْاَرَضِيْنَ ٥ بِرَحْمَتِكَ
يَا اَرْحَمَ الرّٰحِمِيْنَ وَيَا اَكْرَمَ الْاَكْرَمِيْنَ ٥ وَصَلَّى
اللّٰهُ تَعَالٰى عَلٰى خَيْرِ خَلْقِهٖ سَيِّدِنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ
وَاَصْحَابِهٖ اَجْمَعِيْنَ ٥ وَسَلَّمَ تَسْلِيْمًا دَائِمًا اَبَدًا
كَثِيْرًا وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ٥

சுல்தான் மஹ்மூத் கஜ்னவி நாள்தோறும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஓரிலட்சம் ஸலவாத்துகளை ஓதும் வழக்க முடையவராக இருந்தார். இதனால் அவர் அரச அலுவல்களை ஆற்றுவதற்குச் சிறிது இடையூறு ஏற்பட்டது. ஓரிரவு பெருமானார் (ஸல்) அவர்கள் அவரின் கனவில் திருத்தோற்றம் வழங்கி இந்த ஸலவாத்தைக் கற்றுக் கொடுத்து இதனை அவர் வைகறைத் தொழுகைக்குப்பின் வழக்கமாக ஓதி வருமாறும் இதனை அவர் ஒரு தடவை ஓதின் ஓரிலட்சம் ஸலவாத்துகளை ஓதிய பலனைப் பெறுவதோடு தம்முடைய அன்பையும் பெற்றுக் கொள்வார் என்றும் அமுதவாய் விண்டு மறைந்தனர். எனவே இதற்கு ஸலவாத்து லக்கி எனப்பெயர் ஏற்பட்டது.



## ஸலவாத்துல் அஹ்லி பைத்தி

صَلَاةُ اَهْلِ بَيْتٍ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَاَصْحَابِهٖ وَ
اَوْلَادِهٖ وَاَزْوَاجِهٖ وَذُرِّيَّاتِهٖ وَاَهْلِ بَيْتِهٖ
وَاَظْهَارِهٖ وَاَنْصَارِهٖ وَاَتْبَاعِهٖ وَمُحِبِّهٖ
وَاُمَّتِهٖ وَعَلَيْنَا مَعَهُمْ اَجْمَعِيْنَ ٥ يَا اَرْحَمَ الرّٰحِمِيْنَ ٥

### மறுமையில் ஹௌலுல் கௌதர் தண்ணீர் அருந்த

"மறுமையில் ஹௌலுல் கௌதர் தண்ணீர் அருந்த விரும்புவோர் இந்த ஸலவாத்தை வழக்கமாக ஓதி வரவும்" என்று ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் கூறினர்.

### இம்மையிலும் மறுமையிலும் விருப்பங்கள் நிறைவேற

இதனை ஒருவன் நூறு தடவை ஓதின் அவனுடைய நூறு விருப்பங்களை இறைவன் நிறைவேற்றித் தருவான் என்றும் அவற்றில் எழுபதை மறுமையில் நிறைவேற்றித் தருவான் என்றும் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் எழுதிய 'ஸவாயிகுல் முஃரிகா' என்னும் நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## ஸலவாத்துர் ரிலா

صَلَاةُ الرِّضَاءِ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ سَيِّدِنَا
مُحَمَّدٍ صَلَاةً تَكُوْنُ لَكَ رِضًا وَلِحَقِّهٖ اَدَاءً
وَاَعْطِهِ الْوَسِيْلَةَ وَابْعَثْهُ الْمَقَامَ الْمَحْمُوْدَ

الَّذِىْ وَعَدْتَّهُ وَاجْزِهِ عَنَّا مَاهُوَ اَهْلُهُ
وَاَجْزِهِ اَفْضَلَ مَاجَازَيْتَ نَبِيًّا عَنْ اُمَّتِهٖ
وَصَلِّ عَلَيْهِ وَعَلٰى جَمِيْعِ اِخْوَانِهٖ مِنَ النَّبِيّٖنَ
وَالصّٰلِحِيْنَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ ۝

இதனை வெள்ளியன்று ஏழு தடவை ஓதி வருமாறு இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தம்முடைய 'இஹ்யாவு உலூமித்தீன்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளனர்.

**மறுமையில் பெருமானாரின் பரிவுரை பெற**

ஒருவன் இதனை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் ஏழு தடவை வீதம், ஏழு வெள்ளிக்கிழமை தொடர்ச்சியாக ஓதிவரின் அவனுக்குப் பெருமானார் (ஸல்) அவர்களின் பரிவுரை உறுதியாகி விட்டது என வலிமார்களில் சிலர் அறிவிக்கின்றனர்.

## ஸலவாத்துல் ஆலில் கத்ரி

صَلَاةُ الْعَالِى الْقَدْرِ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدِ نِ النَّبِىِّ الْاُمِّىِّ
الْحَبِيْبِ الْعَالِى الْقَدْرِ الْعَظِيْمِ الْجَاهِ بِقَدْرِ
عَظَمَةِ ذَاتِكَ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَسَلِّمْ

“இதனை ஒருவன் ஒவ்வொரு வெள்ளி இரவிலும் வழக்கமாக ஒரு தடவையாவது ஓதிவரின் அவன் இறந்ததும் அவனைப் பெருமானார் (ஸல்) அவர்களே ஹாலிராகி நல்லடக்கம் செய்வர்” என்று இமாம் ஸுயூத்தி (ரஹ்)



அவர்கள் கூறினார்கள். இந்த கருத்தை ஸையித் அஹ்மத் தஹ்லான் (ரஹ்) அவர்களும் தங்களின் 'மஜ்முஆ' என்ற நூலில் குறிப்பிடுகின்றார்கள்.

இதனைப் பெருமானார் (ஸல்) அவர்களே வழக்கமாக ஓதி வந்தார்களள என்றும் கூறப்படுகிறது. இதிலிருந்து இதனுடைய மகத்துவத்தை நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

இது இத்துணை மகத்துவம் வாய்ந்ததாயிருப்பதால் ஒவ்வோர் இரவும் பத்துத் தடவையும் வெள்ளி இரவு நூறு தடவையும் வழக்கமாக ஓதி வருதல் சிறப்புடையது எனப்பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

**ஸலவாத்துல் தஃப்ரீ ஜிய்யா ஸலவாத்துந் நாரிய்யா**

صَلَاةُ التَّفْرِيْجِيَّةِ

اَللّٰهُمَّ صَلِّ صَلَاةً كَامِلَةً وَّسَلِّمْ سَلَامًا تَامًّا
عَلٰى سَيِّدِنَا مُحَمَّدِ تَنْحَلُّ بِهِ الْعُقَدُ وَتَنْفَرِجُ
بِهِ الْكُرَبُ وَتُقْضٰى بِهِ الْحَوَائِجُ وَتُنَالُ بِهِ
الرَّغَائِبُ وَحُسْنُ الْخَوَاتِمِ وَيُسْتَسْقَى الْغَمَامُ
بِوَجْهِهِ الْكَرِيْمِ وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ فِىْ كُلِّ
لَمْحَةٍ وَّنَفَسٍ بِعَدَدِ كُلِّ مَعْلُوْمٍ لَّكَ ۝

இதனை முஃப்தாஹுல் கன்ஸுல் முஹீத்தி என்றும் கூறுவர். இது அல்லாஹ்வின் புதையல்களில் ஒன்றாகும். இதனை வழக்கமாக ஓதி வருவது அதனைத் திறப்பதற்கான திறவுகோலாகும்.

**பெரும் துன்பங்கள் நீங்கப் பெற**

இதனைப் பலரும் ஒருங்கு சேர்ந்து அமர்ந்து 4444 தடவை ஓதின் இறைவனருளால் அப்பெரும் துன்பம் பொசுங்கிச் சாம்பலாகி நிவாரணம் ஏற்படும். எனவே தான் இதற்கு ஸலவாத்துன் நாரியா என்ற பெயரும் ஏற்பட்டது.

இதனை ஒருவர் மட்டும் தனித்து ஓதின் நாளொன்றுக்கு 440 ஸலவாத்து வீதம் பத்து நாட்களுக்கு ஓதிப் பதினொன்றாம் நாள் 44 ஸலவாத்துகளை ஓதி முடித்து இறைவனிடம் இறைஞ்ச வேண்டும்.

**இரணம் அதிகரிக்க**

இதனை ஒருவன் தினமும் 41 தடவை வழக்கமாக ஓதிவரின் இரணம் அவனுக்கு எதிர்பாராவண்ணம் கிடைக்கும் என ஷைகு முஹம்மத் தூனிஸி (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.

**செல்வனாக**

“இந்த ஸலவாத்தை ஒவ்வொரு பர்லான தொழுகைக்குப் பின்பும் பதினொரு தடவை வழக்கமாக ஓதிவரின் அவனுக்குரிய இரணம் அதிகப்பட்டு அவன் விரைவில் செல்வனாவான்” என்று இமாம் தைனூரி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

**துன்பம், துயரம் நீங்க, தகுதி உயர, இரணம் அதிகரிக்க**

“இதனை ஒருவன் நாள்தோறும் வழக்கமாக குறைந்தது நாற்பதொரு தடவை அல்லது நூறு தடவை அல்லது அதற்கு அதிகமாக ஓதிவரின் அவனின் துன்பங்களும் துயரங்களும் நீங்கிவிடும். அவனின் தகுதி உயர்வடையும். அவனின் இரணம் அதிகரிக்கும். அவன் மக்களின் அன்பைப் பெறுவான். இறைவனிடம் அவன் இறைஞ்சுதல் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்படும்'' என்று இமாம் குர்த்தபி (ரஹ்) அவர்கள் கூறினர்.

**நோய், ஷைத்தான், பைத்தியம் ஆகியவை நீங்கப் பெற**

நோய், ஷைத்தான், பைத்தியம் ஆகியவற்றால் பீடிக்கப் பட்டவர்கள் மீது இதனை ஓதி ஊதின் இறையருளால் நற்பலன் ஏற்படும்.



**சுகப்பிரசவம் ஏற்பட**

இதனைத் தட்டைப் பீங்கானில் எழுதிப் பிரசவ வேதனைக்காளானவளுக்குக் கரைத்து ஊட்டின் விரைவில் வேதனை நீங்கிச் சுகப் பிரசவம் ஏற்படும்.

**பெருமானாரைக் கனவில் காண**

இதனை ஒருவன் வழக்கமாக ஓதிவரின் பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் காணும் பேறு பெறுவான்.

**ஸலவாத்துல் ஷம்ஷுல் கன்ஸில் அஃலம்**

பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் காண்போர் ஈமானுடன் இறப்பெய்துவர். மறுமையில் பெருமானார் (ஸல்) அவர்களின் பரிவுரையையும் சுவனப் பெருவாழ்வையும் எய்தப் பெறுவர். அவர்களின் பாவங்கள் மட்டுமின்றி அவர்களின் தாய் தந்தையரின் பாவங்களும் பொறுக்கப்பெறும். அவர்களுக்கு இறப்பின் வருத்தமும் கப்ரின் வருத்தமும் இலேசாக்கப்படும். அவர்கள் மறுமையின் அமளிகளிலிருந்து காக்கப் பெறுவர். இம்மை, மறுமைப் பேறுகளை எய்தப் பெறுவார்கள்.

**شَمْسُ الْكَنْزِ الْاَعْظَمِ**

اَللّٰهُمَّ اجْعَلْ اَفْضَلَ صَلَوَاتِكَ اَبَدًا ۝ وَاَنْمٰى
بَرَكَاتِكَ سَرْمَدًا ۝ وَاَزْكٰى تَحِيَّاتِكَ فَضْلًا وَّعَدَدًا ۝
عَلٰى اَشْرَفِ الْخَلَائِقِ الْاِنْسَانِيَّةِ ۝ وَمَجْمَعِ الْحَقَائِقِ
الْاِيْمَانِيَّةِ ۝ وَطُوْرِ التَّجَلِّيَاتِ الْاِحْسَانِيَّةِ ۝
وَمَهْبِطِ الْاَسْرَارِ الرَّحْمَانِيَّةِ ۝ وَاسِطَةِ عِقْدِ
النَّبِيِّيْنَ ۝ وَمُقَدَّمِ جَيْشِ الْمُرْسَلِيْنَ ۝ وَقَائِدِ

رَكْبِ الْأَنْبِيَاءِ الْمُكَرَّمِيْنَ وَأَفْضَلِ الْخَلَائِقِ
أَجْمَعِيْنَ حَامِلِ لِوَاءِ الْعِزِّ الْأَعْلٰى ٥ وَمَالِكِ
أَزِمَّةِ الْمَجْدِ الْأَسْنٰى ٥ شَاهِدِ الْأَسْرَارِ الْأَزَلِ
وَمُشَاهِدِ أَنْوَارِ السَّوَابِقِ الْأُوَلِ ٥ وَتَرْجُمَانِ
لِسَانِ الْقِدَمِ وَمَنْبَعِ الْعِلْمِ وَالْحِلْمِ وَالْحِكَمِ ٥
مَظْهَرِ سِرِّ الْجُوْدِ الْجُزْئِيِّ وَالْكُلِّيِّ ٥ وَإِنْسَانِ
عَيْنِ الْوُجُوْدِ الْعُلْوِيِّ وَالسُّفْلِيِّ، رُوْحِ جَسَدِ
الْكَوْنَيْنِ ٥ وَعَيْنِ حَيَاةِ الدَّارَيْنِ ٥ الْمُتَحَقِّقِ
بِأَعْلٰى رُتَبِ الْعُبُوْدِيَّةِ الْمُتَخَلِّقِ بِأَخْلَاقِ
الْمَقَامَاتِ الْإِصْطِفَائِيَّةِ الْخَلِيْلِ الْأَعْظَمِ ٥
وَالْحَبِيْبِ الْأَكْرَمِ ٥ سَيِّدِنَا مُحَمَّدِ بْنِ عَبْدِ اللهِ
بْنِ عَبْدِ الْمُطَّلِبِ وَعَلٰى سَائِرِ الْأَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ
وَعَلٰى اٰلِهِمْ وَصَحْبِهِمْ أَجْمَعِيْنَ ٥ كُلَّمَا
ذَكَرَكَ الذَّاكِرُوْنَ ٥ وَغَفَلَ عَنْ ذِكْرِكَ
الْغٰفِلُوْنَ ٥



"ஒருவன் இதனை வழக்கமாக ஓதிவரின் அவன் ஷைத்தான்களின் ஊசாட்டங்களை விட்டும் காக்கப் பெறுவான்" என இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

### பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் காண

ஒருவன் இஷா தொழுதபின் சூரத்துல் இக்லாஸ், சூரத்துல் ஃபலக், சூரத்துல் நாஸ் ஆகிய ஒவ்வொன்றையும் மூன்று தடவை ஓதியபின் இந்த ஸலவாத்தை மன. ஒருமையுடன் ஓதின் அவன் பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் காணும் பேறு பெறுவான்.

"என்மீது ஸலவாத்து ஓதின் மற்ற நபிமார்கள், ரசூல் மார்கள் ஆகியவர்கள்மீது ஸலவாத்து ஓதுங்கள்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதற்கேற்ப இந்த ஸலவாத்து அமையப்பெற்றது இதனுடைய தனிச் சிறப் பாகும்.

இது முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் ஓதி வந்த ஸலவாத்து எனவும் சில வலிமார்கள் கூறுகின்றார்கள்.

### இமாம் ஷாபியீ (ரஹ்) அவாகள் வழக்கமாக ஓதி வந்த ஸலவாத்துஷ் ஷாபிஈ

صَلَاةُ الشَّافِعِيْ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ كُلَّمَا ذَكَرَهُ
الذَّاكِرُوْنَ وَصَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ
سَيِّدِنَا مُحَمَّدٍ كُلَّمَا غَفَلَ عَنْ ذِكْرِهِ الْغَافِلُوْنَ ٥

இஸ்பஹானி இமாம் (ரஹ்) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டு, "இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் தங்களின் பெரிய தந்தையின் வழி வந்த வராயிற்றே.

அவர்களுக்குத் தாங்கள் அளித்த தனிச் சிறப்பு யாது?" என்று வினவிய பொழுது, "அவரிடம் மறுமையில் கேள்வி கணக்குக் கேட்க வேண்டாமென்று இறைவனிடம் பரிந்துரைத்திருக் கின்றேன்" என்று பதிலிறுத்தனர். "அத்தகு பேற்றினை அவர் கள் எவ்வாறு எய்தப் பெற்றனர்?" என்று இஸ்பஹானி இமாம் (ரஹ்) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை வினவ, "அவர் என் மீது எவருமே ஓதாத ஸலவாத்தை வழக்கமாக ஓதி வருவதன் காரணமாக நான் இறைவனிடம் அவருக்காக அவ்விதம் பரிந்துரைத்தேன்" என்று கூறி மேலே கூறப்பட்ட ஸலவாத்தை மொழிந்தனர்.

### ஸலவாத்துல் திப்பில் குலூபி

صَلَاةُ طِبِّ الْقُلُوْبِ

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ طِبِّ الْقُلُوْبِ وَدَوَائِهَا وَعَافِيَةِ الْاَبْدَانِ وَشِفَائِهَا وَنُوْرِ الْاَبْصَارِ وَضِيَائِهَا وَعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ وَبَارِكْ وَسَلِّمْ

### நோய், ஆபத்து அணுகாதிருக்க

இதனை வழக்கமாக ஓதிவரின் நோய், ஆபத்து முதலியவை அணுகா.

### உடல் வேதனை நீங்க

உடலில் வேதனை, வலி ஏற்படின் இதனைத் தொடர்ந்து ஓதி ஊதினால் இறையருளால் நிவாரணம் கிடைக்கும்.

### கண்ணொளி பெற

பார்வை குறைந்தவர்கள் அல்லது பார்வையை இழந்த வர்கள் இதனைக் காலையில் நூறு தடவையும் மாலையில் நூறு தடவையும் வழக்கமாக ஓதிவரின் அவர்கள் கண் ணொளி எய்தப் பெறுவர்.



### நோய் நீங்க

"நோயாளன் ஒருவன் தூய்மையாக அமர்ந்து நல் லெண்ணத்துடன் இதனை ஓதின் இதன் பொருட்டால் நோய் நீங்கப் பெறுவான்" என இமாம் ஷாபியீ (ரஹ்) அவர் கள் கூறினர். இதனை நோயுற்றவர்மீது ஓதி ஊதவும் தண்ணீரில் ஓதி ஊதிக் குடிக்கவும் கொடுப்பின் அவர்கள் விரைவில் நலம் பெறுவர்.

### அகத்தூய்மை பெற

இதனை வழக்கமாக ஓதி வருபவர் அகத் தூய்மை எய்தப் பெறுவர்.

### ஸலவாத்து அஃராபி

صَلَاةُ الْاَعْرَابِيِّ

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ سَيِّدِنَا مُحَمَّدٍ فِي الْاَوَّلِيْنَ وَالْاٰخِرِيْنَ وَفِي الْمَلَاءِ الْاَعْلٰى اِلٰى يَوْمِ الدِّيْنِ ○

ஒருநாள் பெருமானார் (ஸல்) அவர்கள் தங்களின் தோழர்கள் புடைசூழ வீற்றிருக்குங்கால் ஒரு காட்டரபி ஆங்கு வந்து பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறிய பொழுது அவர்கள் அவருக்கு அன்புடன் பதில் ஸலாம் உரைத்து அவரைத் தமக்கும் அபூ பக்கர் (ரலி) அவர்களுக்கும் இடையே அமரச் செய்தனர். இதைக் கண்டு பெரிதும் வியப்புற்ற அபூ பக்கர் (ரலி) அவர்கள் இதற்கான காரணத்தை வினவ, பெருமானார் (ஸல்) அவர்கள், இதற்கு முன்னர் எவருமே ஓதாத ஸலவாத்து ஒன்றை இவர் வழக்கமாக ஓதி வருவதன் காரணமாக

இவருக்கு இத்தகு மரியாதை செய்யுமாறு ஜிப்ரீல் வந்து தம்மிடம் கூறியதால் அவ்விதம் செய்ததாக மறுமொழி பகர்ந்தனர். அந்த ஸலவாத்து யாதென அபூ பக்கர் (ரலி) அவர்கள் வினவ, அதனைப் பெருமானார் (ஸல்) அவர்கள் ஓதிக் காட்டி இதனை வழக்கமாக ஓதி வருவதனால் ஏற்படும் நற்பலன்கள் எண்ணிலடங்காதவை என்று கூறினர்.

## ஸையிதினா இப்ராஹீமில் மப்தூலி (ரஹ்) அவர்கள் வழக்கமாக ஓதி வந்த ஸலவாத்துல் மப்தூலிய்யா

صَلَاةُ مَبْتُوْلِيَّة

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْئَلُكَ بِكَ اَنْ تُصَلِّيَ وَتُسَلِّمَ
عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلٰى سَائِرِ الْاَنْبِيَاءِ وَالْمُرْسَلِيْنَ
وَعَلٰى اٰلِهِمْ وَصَحْبِهِمْ اَجْمَعِيْنَ وَاَنْ تَغْفِرَلِيْ
مَامَضٰى وَتَحْفَظَنِيْ فِيْمَا بَقِيَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

இதனை வழக்கமாக ஓதி வருபவர் அளவற்ற நற்பலன்களை எய்தப் பெறுவர். இதனை வழக்கமாக ஓதி வந்த ஸையிதினா இப்ராஹீமில் மப்தூலி (ரஹ்) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை விழிப்பு நிலையில் கண்டு அவர்களிடம் முரீது பெற்றனர் என்று கூறப்படுகிறது.

## பெருமானார் (ஸல்) அவர்களின் பரிவுரை நிச்சயம் கிடைக்கப் பெற ஓதும்

### ஸலவாத்துஷ் ஷஃபா அத்தி

அல்லாஹு"ம்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அன்ஸில்ஹு"ல் மக் அதல் முகர்ரப இன்ந்தக யவ்மல் கியாமத்தி வஜபத்லஹு" ஷஃபா அத்தீ



"இதனை ஓதுபவருக்கு மறுமையில் என் பரிவுரை நிச்சயமாகக் கிடைக்கும்" என்று பெருமானார் (ஸல்) கூறியதாக ருவைபஉ அன்ஸாரு (ரலி) அவர்கள் இயம்புகின்றனர்.

## ஸலவாத்துத் ஜஸா

அல்லாஹு"ம்ம ரப்ப முஹம்மதின் ஸல்லி அலா முஹம்மதின், வஅலா ஆலி முஹம்மதின் வஜ்ஸி முஹம்மதின் ஸல்லல்லாஹு" அலைஹி வஸல்லம் மாஹு"வ அஹ்லுஹு"

## அளவற்ற நன்மைகள் பெற

இதனை ஓதி வருபவர்க்கு கிடைக்கும் நன்மைகள் அளவிடற்பாலதாகும். "இதனை ஓதுபவர் இதற்கான நன்மைகளை எழுதும் சிரமத்தை வானவர்களுக்கு ஆயிரம் நாட்களுக்குக் கொடுத்து விட்டார்" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினர்.

## ஸலவாத்துல் ஹாலிரிய்யின்

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ زَيَّنَ النَّبِيِّيْنَ بِحَبِيْبِهِ
الْمُصْطَفٰى وَمَنَّ عَلَى الْمُؤْمِنِيْنَ بِنَبِيِّهِ
الْمُجْتَبٰى وَالصَّلَاةُ وَالسَّلَامُ عَلٰى رَسُوْلِهِ
مُحَمَّدٍ خَيْرِ الْوَرٰى الْمُسْرٰى بِهٖ مِنْ فَوْقِ الْعَرْشِ
اِلٰى تَحْتِ الثَّرٰى اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ عَيْنِ
الْعِنَايَةِ كَنْزِ الْهِدَايَةِ اِمَامِ الْحَضْرَةِ

أَمِيْنِ الْمَمْلَكَةِ طِرَازِ الْحُلَلِ نَاصِرِ الْمِلَلِ
سُلْطَانِ الطَّرِيْقَةِ بُرْهَانِ الْحَقِيْقَةِ زَيْنِ
الْقِيٰمَةِ تَاجِ الْمِلَّةِ شَمْسِ الشَّرِيْعَةِ
شَفِيْعِ الْاُمَّةِ كَاشِفِ الْغُمَّةِ عَالِي الْهِمَّةِ
يَوْمَ الْقِيٰمَةِ سِرَاجِ الْعَالَمِيْنَ اَللّٰهُ عَاصِمُهٗ
وَجِبْرِيْلُ خَادِمُهٗ وَالْبُرَاقُ مَرْكَبُهٗ وَالْمِعْرَاجُ
سَفَرُهٗ وَسِدْرَةُ الْمُنْتَهٰى مَقَامُهٗ وَقَابَ قَوْسَيْنِ
مَطْلُوْبُهٗ وَالْمَطْلُوْبُ مَقْصُوْدُهٗ وَالْمَقْصُوْدُ مَوْجُوْدُهٗ
شَمْسِ الضُّحٰى بَدْرِ الدُّجٰى نُوْرِ
الْهُدٰى اِمَامِ الْمُتَّقِيْنَ اَصْفَى الْاَصْفِيَاءِ
مُحَمَّدِ نِ الْمُصْطَفٰى صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ
قِبْلَةِ الْعَارِفِيْنَ وَكَعْبَةِ الطَّائِفِيْنَ
وَحَبِيْبِ رَبِّ الْعَالَمِيْنَ وَعَلٰى اٰلِهٖ وَاَصْحَابِهٖ
وَاَزْوَاجِهٖ وَذُرِّيَّاتِهٖ وَخُدَّامِهٖ وَاَحِبَّائِهٖ
وَعَشِيْرَتِهٖ وَعِتْرَتِهٖ وَاَوْلَادِهٖ وَاَهْلِ بَيْتِهٖ
وَبَارِكْ وَسَلِّمْ



**துன்பம், துயரம் நீங்க**

இதனை ஒருவன் வழக்கமாக ஓதிவரின் அவன் அல்லாஹ்வுக்கும் அவனுடைய ரஸூலுக்கும் மிகவும் உவப்புடையவனாகி அவனுடைய துன்பம், துயரங்கள் நீங்கப் பெறுவான்.

**கடன் வாய்ப்படாதிருக்க**

மேலும் அவன் ஒரு போதும் கடன் வாய்ப்படவோ பிறரின் உதவி வேண்டி நிற்கும் நிலையிலோ ஆகமாட்டான்.

**வெற்றி பெற**

இன்ஷா அல்லாஹ், அவன் தன் செயல் அடங்கலிலும் வெற்றியைக் காண்பான்.

**இறப்பிற்குப்பின் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் தொடர்பு கொள்ள**

ஃபகீஹ் ஸாலிஹ் உமர் இப்னு ஸயீத் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: "அண்ணல் நபி (ஸல்) அவர்கள் திருவுளமாயினர்:

ஒருவர் நாள்தோறும்

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ صَلَاةً تَكُوْنُ
لَكَ رِضًا وَلِحَقِّهٖ اَدَاءً

என்ற ஸலவாத்தை முப்பத்து மூன்று தடவை ஓதிவரின் என்னுடைய அடக்கவிடத்திற்கும் அவருடைய அடக்கவிடத்திற்கும் இடையே அல்லாஹ் ஒரு வழியைத் திறந்து வைப்பான்.

**துன்பம், துயரம் நீங்க**

பெரியார் ஒருவர் கூறுகின்றனர்: "ஒருவனுக்குத் துன்பம் ஏற்படின்,

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدِ نِ النَّبِىِّ الْاُمِّيِّ الطَّاهِرِ
الزَّكِيِّ صَلَاةً تُحَلُّ بِهَا الْعُقَدُ وَتُفَكُّ
بِهَا الْكُرَبُ ـ

என்ற ஸலவாத்தைத் திரும்பத் திரும்ப ஓதின் அவன் துன்பம் நீங்கி நலன் எய்தப் பெறுவான்.

ஸல்லல்லாஹு அலா முஹம்மத்
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்